விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 28 திங்கட்கிழமை (11.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054

Dishtv
பழைய Dishtv ரிஸீவர்க்கு பதிலாக புதிய ரிஸீவர் 700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை, (பழைய தபால் கந்தோர் வீதி, யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5441)

# ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு மீண்டும் எச்சரிக்கை

(ஜெனிவா)

அரசாங்கம் பொறுப்புக்கூறல் செயல்முறைகளில் சில முன்னேற்றங்களையே எட்டியுள்ளது என்றும் பொறுப்புக்கூறலில் மெதுவாகவே செயற்படுவதாகவும், சீரான அணுகுமுறையை கடைப்பிடிக்கவில்லை என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசெலெட் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## வெங்கையா நாயுடுவை சந்தித்தார் மகிந்த



23

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ். வீதி மருதனார் மடம் சந்தியில் நடந்த விபத்தில் படுகாயமடைந்த குடும்பப்பெண் ஒரு வாரத்தின் பின் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி கே.கே.எஸ் வீதி மருதனார்மடம் சந்தி 23

## அமெரிக்கா கோத்தாவை தடுக்கும் நம்பிக்கையில் மைத்திரி



(கொழும்பு)

அமெரிக்க குடியுரிமையை கோத்தபாய ராஜபக்ஷ கைவிடும் முயற்சி வெற்றியளிக்காது என்ற நம்பிக்கையிலேயே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாம் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்பார்ப்பில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. 24

## ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு; பிரதான தமிழ்க் கட்சியும் சம்மதம்

### சிறிய சரத்துக்களிலேயே அவர்கள் திருத்தத்தை கோருகின்றனர் என்கிறார் ரணில்



(கொழும்பு)

சுமார் 70 வருடங்களின் பின்னர் பிரதான தமிழ்க் கட்சி ஒருமித்த நாட்டுக்குள் தீர்வை ஏற்றுக் கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக பிரதமர் ரணில் 23

## தாய்ப்பால் புரைக்கேறி ஒருமாத குழந்தை மரணம்

(வவுனியா)

வவுனியா, சாம்பல் தோட்டம் பகுதியில் தாய்ப்பால் புரைக்கேறியதில் ஒரு மாத குழந்தை ஒன்று மரணமாகியுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று மதியம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா 24

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிகள் குழாமாக தூதுவர்களை சந்திக்க முயற்சி!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களிற்கும், வெளிநாட்டு தூதர்களிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்றிற்கு முன்னாயத்த பணிகள் நடந்து வருகின்றன.

கடந்த வார இறுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு கூட்டத்திலும் இது குறித்து விவாதிக்கப்பட்டது.

கனடா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தூதர்களை சந்தித்து பேசுவதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் திட்டம். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுவதால், எம்.பிக்களை சமரசப்படுத்தும் விதமாக, அனைத்து எம்.பிக்களும் தூதர்களை சந்திப்பதென முடிவானது. கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் 23

### தம்பி பிரபாகரனின் முன்மாதிரியை பின்பற்றியே நடந்தேன்

## கஜேந்திரகுமார் இறங்கி வந்தால் அவரது கூட்டத்திலும் பங்கேற்பேன்

### விக்னேஸ்வரன் நீண்ட விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினருக்கு கூட்டமைப்பில் இடம் தந்த தம்பி பிரபாகரனின் முன்மாதிரியை முன்வைத்தே நான் அங்கு சென்றேன் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

### வரணி இயற்றாலை பகுதியில்

## திருட்டு சந்தேக நபரை தாக்கிய குற்றச்சாட்டில் கைதானவருக்கு பிணை

(சாவகச்சேரி)

வரணி இயற்றாலைப் பகுதியில் கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை நேற்று சாவகச்சேரி நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

கடந்த 4ஆம் திகதி வரணி இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்ற 10 பவுண் தங்க நகை மற்றும் 57 ஆயிரம் ரூபாய் 23


யாழ்.மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
இல : 91, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
021 222 2031
(C-5449)

தங்கமான உறவு இப்பொழுது
புதிய பொலிவுடன்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 04 . 1940

மறைவு 10 . 02 . 2019

## திருமதி வைத்தீஸ்வரன் சிவஞானேஸ்வரி

தாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்தீஸ்வரன் சிவஞானேஸ்வரி அவர்கள் நேற்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் (இலங்கை வங்கி ஓய்வூதியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான் நல்லையா - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிலிங்கம் - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும், லோஜனி (ஆசிரியை - இணுவில் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற கோகுலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பார்த்தீபன் (வருகைதரு விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி) அவர்களின் பாசமிகு மாமியாரும், லவர்ணியா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கமலராணி அவர்களின் பாசமிகு சகோதரியும், அம்பிகாவதி, லீலாவதி, இராணிமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான திலகவதி, புஸ்பவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2019) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில். (7481)

தகவல் : P. பார்த்தீபன் (மருமகன்)
077 605 9613

## மணமகள் தேவை

87, உத்தரட்டாதி 3, 11ல் சூரியன்- செவ்வாய், பட்டதாரி, சொந்தத் தொழில் மணமகனுக்கு மணமகள் தேவை.

**துர்க்கா திருமண சேவை**
**0778185978, 0750111122**

## வேலை ஆள் தேவை

- ஓவ் செற் கோட் மிசின் மைண்டர்
- கணனி ரைப்பிங், வடிவமைப்பு (Designer)
- வைண்டிங் வேலை (அனுபவம் வாய்ந்தவர்கள்)

**சிவதயா அச்சகம்**
இல.92 (150), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்தி அருகாமை)
தொ.பே: 077 396 5214

# புல்மோட்டை கடற்பரப்பில் தமிழக மீனவர் 7 பேர் கைது!

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 7 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புல்மோட்டை கடற்பரப்பில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்தது. தமிழகத்தின் நாகை மாவட்டத்தினைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் மீன்பிடி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்படை குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் மருத்துவ பரிசோதனைகளைத் தொடர்ந்து மீனவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (மு-3)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நூலக பொறுப்பாசிரியர் திருமதி லோஜினி பார்த்தீபன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**வைத்தீஸ்வரன் சிவஞானேஸ்வரி**


அவர்கள் 10.02.2019 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8474)

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம், யா/ இணுவில் மத்திய கல்லூரி.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சுந்தரம்பிள்ளை கதிரவேலு

(முன்னாள் லொறிச் சாரதி SAFEE & V.M.S ட்ரான்ஸ்போட்)

திதி: ஸப்தமி (11.02.2019)

**தோற்றம்: 26.06.1932 - மறைவு: 03.02.2017**

ஆண்டுகள் இரண்டு சென்றுவிட்டன - தங்களின்
ஆனந்த முகத்தைக் கண்டு!
சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க
ஆவலாய் நிற்கின்றோம்!
அனுதினமும் தங்களின் நினைவுடன் - நாம்
அலைமோதி நிற்கின்றோம்!
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்!
மறுபடி உங்களைக் காண்போம்
இறைவனின் வருகையிலே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(கி-5453)



துரட்டிப்பனை அம்மன் வீதி,
வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.

நீங்கா நினைவுகளுடன்... மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# தம்பி பிரபாகரனின் முன்மாதிரியை பின்பற்றியே ஈ.பி.ஆர்.எல்.எப்.கூட்டத்திற்கு நான் சென்றேன்

## விதண்டாவாதம் பேசுவோருக்கு விக்னேஸ்வரன் சாட்டையடி



(யாழ்ப்பாணம்)

**பிழைகள் செய்யாதவர்களே ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியினர் என்று நான் கருதி குறித்த கூட்டத்திற்குச் செல்லவில்லை. அவ்வாறு பிழைகள் செய்திருந்தும் மன்னித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அவர்களுக்கு இடம் தந்த தம்பி பிரபாகரனின் முன்மாதிரியை முன்வைத்தே நான் அங்கு சென்றேன். தமிழர்களின் வருங்காலம் கடந்த காலத்தால் மாசுபடக் கூடாது என்பதால் நான் அங்கு சென்றேன். எவரையுமே அவர் நல்லவர், இவர் கூடாதவர் என்று பாகுபாடு காட்டி நடக்க என் மனம் இடங் கொடுப்பதில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் ஸ்தாபகரும் செயலாளர் நாயகமுமான முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இவ்வாரத்தின் கேள்வி சீக்கிரமே கிடைத்துள்ளது. அது பலர் கேட்கும் கேள்வியாக ஆனால் தனியொருவரிடமிருந்து வந்துள்ளது. இதோ அந்தக் கேள்வி -

கேள்வி: ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட்டத்தில் கலந்துகொள்ளாதீர்கள் என்று நான் எச்சரித்தேன். அதற்கு காரணங்கள் தந்து நீங்கள் பங்குபற்றினீர்கள். நாங்கள் தடுத்தமை பற்றிக்கூட உங்கள் பேச்சில் குறிப்பிட்டிருந்தீர்கள். இப்பொழுது நடந்ததைப் பார்த்தீர்களா? அது உங்களுக்கே உலை வைத்துள்ளதே! நீங்கள் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றியது சரியா?

### நெஞ்சில் ஈரம் கொண்டவன் எதற்குமே அஞ்சமாட்டான்

பதில் : கட்டாயம் சரி! மூளை உள்ளவன் தன் நலங் கருதி இவ்வாறானவற்றைத் தவிர்ப்பான். நெஞ்சத்தில் ஈரம் கொண்ட வன் எதற்குமே அஞ்சமாட் டான். எந்தவொரு சூழ் நிலையையும் இறைவன் அவனுக்குத் தரும் அனுபவமாகவே எடுத்துக் கொள்வான். என்னைப் பொறுத்த வரையில் எனது அரசியல் குறிக்கோள் எனக்கு மிகவும் அவசியம். அந்தவகையில் எம்முடன் கொள்கை ரீதியாக உடன் பயணிப்பவர்களின் கூட்டங்களில் கலந்து கொள்வது பிழையாகாது. அதனால் தான் ஐங் கரநேசனின் கூட்டங்களில் நான் பங்குபற்றி வந்துள் ளேன். அனந்தியின் கூட்ட ங்களிலும் பங்குபற்றுவேன். கஜேந்திரகுமார் சற்று இறங்கி வந்தால் அவரின் கூட்டங்களிலும் பங்குபற்றுவேன்.

எமதுதமிழ்மக்களிடையே ஏன் சிங்கள மக்களிடையேயும்தான் பழையதைக் கிளறி அவற்றில் உழல்வதில் அலாதிப்பிரியம். முன்னர் ஜீ ஜீயா செல்வாவா சரி என்றார்கள். அதில் பிரிந்து நின்றார்கள். பின்னர் சங்கரியா சம்பந்தனா என்றார்கள். அண்மைக் காலத்தில் கூட்டமைப்பா கூட்டணியா என்றுள்ளார்கள். அதற்கு முன் "கூட்டமைப்பா துரோகிகளா என்ற காலமும் இருந்தது. அத்துடன் மேலும் ஒரு கேள்வி தற்போது எழுந்துள்ளது. புலிகளா? மற்றவர்களா? என்பதே அது. பழையனவற்றில் உழன்றோமானால் வருங்காலத்தைப்பற்றிச் சிந்திக்கப் போகின்றவர்கள் யார்?

வருங்காலம் பற்றி சிந்தித்து முன்னேற முனைபவனுக்கு கடந்த காலம் கடந்த காலமாகவே இருக்கும். கடந்த காலத்துப் பிழைகள் நிகழ்காலத்தைப் பாதிக்க விட்டோமானால் வருங்காலம் பாதிப்படையும். போர்க்காலங்களில் நடந்த வன்முறைகள், வன்கொலைகள், வன் செயல்கள் போன்றவை ஆராய்ச்சியாளனுக்கு உகந்ததாக இருக்கலாம் என்னும் அரசியல் வாதிக்கு அவை பற்றிய முற்றுமுழுதான பாண்டித்யம் ஏற்பட்டால் அவருக்குத் தன்னைச் சுற்றியுள்ள எவருமே நல்லவர்களாகத் தென்படமாட்டார்கள். அவர் இதைச் செய்தார். மற்றவர் அதைச் செய்தார் என்று தொடர்ந்து விவாதித்துக் கொண்டே காலத்தைப் போக்கலாம். இதுகாறுமான அரசியலும் அவ்வாறுதான் நடந்து வந்துள்ளதாக அவதானிக்கின்றேன். அதுமட்டுமல்ல, நடக்காததை நடந்ததாகக் கூறி தேர்தல் நலந்தேடும் படலங்களும் இயற்றப்பட்டு வந்ததையும் நாம் காணலாம். நடந்தவற்றை நடக்கவில்லை என்று அடித்துக் கூறியவர்களையும் நாம் கண்டுள்ளோம்.

### மனிதன் மாறலாம்

மற்றவர்கள் குற்றவாளிகள். நாங்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க சகல அரசியல் வாதிகளும் முன்னின்று செயற்பட்டு வருகின்றார்கள். அதற்கு அப்பால் எம்மக்களின் சிந்தனைகள் போகாமல் இருக்க இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்களோ நான் அறியேன். "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" ஊரை இரண்டாக்கும் பழக்கம் அரசியல் வாதிகளாகிய எம்மிடம் தொண்டுதொட்டு இருந்து வந்துள்ளது. ஆகவே அரசியல் வாதிகளாகிய நாங்கள் கூத்தாடிகளாகவே காலங்கடத்திப் பழகிவிட்டோம். ஊரை இரண்டாக்கி அதில் சுயநலங் காக்கவே நாம் விரும்புகின்றோம். ஒட்டுமொத்த தமிழ் மக்களின் வருங்காலம் எமக்கு முக்கியமன்று. எமது குறுகிய அரசியல் நோக்கு. சுயநல இலாபமே எமக்கு முக்கியம்.

பொதுவாக மற்றவர்கள் பற்றி நாம் கிரகித்துக் கொள்ளும் எமது புலன் அனுபவங்கள் என்றென்றும் எம்முள் உறைந்தேயுள்ளதை நாம் காணலாம். அதனால் தான் நாம் ஒவ்வொருவரையும் ஏதோஒருவகையினுள் அல்லது இனத்தினுள் அல்லது அலகினுள் புகுத்திவிட்டு அங்கேயே அவர்களைத் தொடர்ந்து சிறைப்படுத்தி வைத்து வருகின்றோம். அந்தவகைக்கு அப்பால் அவர்களைப் பார்க்கவோ பேசவோ நாம் விருப்பப்படுவதில்லை. இன்னார் என்றென்றும் இன்னார்தான். வரிக்குதிரைகள் தமது வரிகளைக் கலைக்கமாட்டா என்பது அவர்கள் வாதம். வரிக்குதிரைகள் ஆறாம் அறிவு அற்றவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனிதன் மாறலாம். மனிதன் மேல் நாம் கொண்ட எண்ணங்கள் மாறலாம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

### மாவைக்குப் பிணை

மாவை சேனாதிராசாவையும் காசிஆனந்தனையும் ஒரு வருடகாலத்திற்கு மேலாக ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டதாகக் கூறி அரசாங்கம் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் அடைத்து வைத்திருந்தது. அவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு நீதிமன்றில் வழக்கு இருந்தது. நான் முதன்முதலில் நீதிபதியாக நியமனம் பெற்றதும் மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டேன். அப்போது எனக்கு மாவையையோ காசியையோ தனிப்பட்ட முறையில் தெரியாது. அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருபவர்கள் என்று கொழும்பு பத்திரிகைகள் அவர்களைப் படம்பிடித்துக் காட்டி வந்தன. அவற்றை வைத்து அவர்கள் மீது சந்தேகமும் வெறுப்பும் எனக்கெழுந்திருந்தால் அதனை எவரும் குறைகூற முடியாதிருந்தது. ஆனால் நான் அங்கு சென்றதும் கேட்ட கேள்வி "ஏன் இவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் இதுகாறும் பதியப்படவில்லை" என்பதே. அதற்கு அரசாங்கம் சாக்குப் போக்கு சொல்லியது. உடனே நான் ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து அதற்கிடையில் குற்றப்பத்திரம் பதியாவிட்டால் நான் குறித்த சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல விடுவேன் என்று கூறி வைத்தேன். குறித்த நாள் வந்தது. குற்றப்பத்திரம் பதியப்படவில்லை. ஏதேதோ காரணங்கள் அரச சட்டத்தரணியால் கூறப்பட்டன. நான் அவற்றைப் பரிசீலித்து மத்தியானம் எனது தீர்மானத்தைத் தருவேன் என்று கூறி மன்ற இருப்பை ஒத்தி வைத்தேன்.

அப்போது மட்டக்களப்பின் மிக சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலர் என்னைக் காண என் தனியறைக்கு வந்தார்கள். அவர்களுள் ஒருவர் "சேர்! நீங்கள் இப்பொழுதுதான் நீதிபதியாகப் பதவியேற்று வந்துள்ளீர்கள். இளம் வயதினர், இளம் குடும்பம் உங்களுக்கு இந்த எதிரிகள் பற்றித் தெரியாது. அவர்கள் கிளர்ச்சிக்காரர்கள். வன்முறையாளர்களுடன் தொடர்பு கொண்டவர்கள். நாட்டை நாசமாக்கத் துணிந்தவர்கள். அவர்களுக்குப் பரிந்து நீங்கள் பிணை வழங்கினீர்கள் என்றால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். உங்கள் நீதிபதி வாழ்க்கை கூட அதனால் பாதிப்படையும். உங்கள் நன்மைக்காகத்தான் இதை உங்கள் நலன் கருதி உங்களுக்குக் கூறுகின்றோம்" என்றார். நான் எழுந்து அவர்கள் யாவருக்கும் கைலாகு கொடுத்து அவர்களுக்கு என் மீது இருந்த பரிவுக்கும் கரிசனைக்கும் மனமுவந்து நன்றியைத் தெரிவித்தேன். பின்னர் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் ஒருவருடத்திற்கும் மேலாக தாக்கல் செய்யாததாலும் நான் கொடுத்த தவணைக் கெடுவுக்குள் அவ்வாறு தாக்கல் செய்யாததாலும் அவர்களுக்குப் பிணை வழங்கி அரசாங்கம் அவர்களுக்கு எதிராக எப்போது வழக்குப் பதிய முடியுமோ அப்போது அவர்களுக்கு அறிவித்தல் கொடுத்து வழக்கைப் பதியலாம் என்று கட்டளை இட்டேன். பின்னர் வழக்குப் பதியப்பட்டதோ எனக்குத்தெரியாது. நான் பதவியேற்று ஏழு மாதத்திற்குள் இந்த வழக்கின் தீர்மானம் கொடுத்து ஒரு சில வாரங்களினுள் நான் சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டேன். அது எனக்கு அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தண்டனையாகவே பலர் எடுத்துக் கொண்டார்கள்.

அன்று என்னை வந்து சந்தித்த சிரேஷ்ட சட்டத்தரணிக்கு மாவையும் காசியும் கிளர்ச்சிக்காரர்கள், வன்முறையில் ஒத்தூதுபவர்கள், நாட்டைக் குட்டிச் சுவராக்க வந்தவர்கள். இன்று மாவை மக்கள் தலைவர். கட்சித் தலைவர். காசி உணர்வுள்ள, துடிப்புள்ள உன்னதக் கவிஞர். இவ்வளவையும் நான் கூறுவதற்குக் காரணம் ஏற்கனவே நாம் கேட்கும் செய்திகளில் இருந்து மக்களை எடைபோட்டு அவற்றின் அடிப்படையில் அவர்களை விலக்கி நடப்பது நாம் செய்யும் ஒருபிழை என்று காட்டுவதற்கே. காதால் கேட்பதற்கும் கண்ணால் காண்பதற்கும் வரம்பும் வரையறைகளும் உண்டு என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கே!

### "நீங்கள் யாவரும் பிழையற்றவர்களா?"

கொள்ளைக்காரன் வால்மீகி உலகம் போற்றும் இராமாயணத்தின் ஆசிரியர் ஆனார். ஆயிரம் விரல் தேடி அப்பாவிகளைத் துன்புறுத்தி 999 பேரின் கைச் சிறுவிரல்களை அறுத்து மாலையாகப் போட்டிருந்த அங்குலிமாலா புத்தபெருமானின் மிகப் பெரிய சீடராகப் பிற்காலத்தில் போற்றப்பட்டார்.

கடந்த காலங்களைக் கூறி நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் பாழாக்க முனையாதீர்கள் என்று கூற வருகின்றேன். ஒருவர் பிழை செய்திருந்தால் அதனை ஏற்று, மாறி நடக்க அவருக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். மேரிமக்டலீனுக்குக் கல்லால் வீச எத்தனித்த மக்களிடம் இயேசு கிறிஸ்து நாதர் கேட்டார் "பிழைசெய்யாத 'ஒருவர் உங்கள் மத்தியில் இருந்தால் அவர் முதற் கல்லை எறியட்டும்" என்று. எவருமே எறிய முன்வரவில்லை. தாம் பிழையற்றவர்கள் என்று நினைத்து, மற்றவர் பிழை செய்தார் என்று கணித்து அவர்கள் கல்லை வீச எத்தனித்தார்கள். "நீங்கள் யாவரும் பிழையற்றவர்கள்?"தானா என்று கேட்டதும் அம்மக்கள் தமது பிழையை உணர்ந்துகொண்டார்கள்.

இனி உங்கள் கேள்விக்கு வருகின்றேன். பிழைகள் செய்யாதவர்களே EPRLF கட்சியினர் என்று நான் கருதி குறித்த கூட்டத்திற்குச் செல்லவில்லை. அவ்வாறு பிழைகள் செய்திருந்தும் மன்னித்து கூட்டமைப்பில் அவர்களுக்கு இடம் கொடுத்த தம்பி பிரபாகரனின் முன்மாதிரியை முன்வைத்தே நான் அங்கு சென்றேன். தமிழர்களின் வருங்காலம் கடந்தகாலத்தால் மாசுபடக் கூடாது என்பதால் நான் அங்கு சென்றேன். எவரையுமே அவர் நல்லவர், இவர் கூடாதவர் என்று பாகுபாடு காட்டி நடக்க என் மனம் இடங்கொடுப்பதில்லை. எல்லோருமே இறைவனால் படைக்கப்பட்டவர்கள். அல்லது இயற்கையால் உருவாக்கப்பட்டவர்கள். நான் தண்டனை விதித்த பல குற்றவாளிகளைப் பின்னர் நான் கண்டபோது அவர்களுடன் அன்புடன் அளவளாவி இருக்கின்றேன். அவர்களும் தமது கடந்தகால வாழ்க்கையில் இருந்து மீண்டு உத்தமர்களாக உருமாறியதை நான் கண்டுள்ளேன். ஆகவே குறித்த கூட்டத்தில் நான் கலந்து கொண்டதில் எந்தப் பிழையும் இல்லை. அவர்கள் முன்னர் செய்ததாகக் கூறப்படும் குற்றங்களோ அவர்கள் குறிப்பிடும் மற்றவர்களின் குற்றங்களோ என்னுடைய முன்னோக்கிய அரசியல் பிரயாணத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதே எனது கருத்து. அரசியல் பிரயாணத்தின் போது உள்ளதை இல்லை என்பார்கள். இல்லாததை உள்ளதாகச் சித்திரிப்பார்கள். அது அவரவர்களின் வளர்ச்சி, முதிர்ச்சி போன்றவற்றைச் சார்ந்தது. அதுமட்டுமல்ல. தாமே சில நிகழ்வுகளை இயற்றிவிட்டு நாமே அவற்றைச் செய்ததாக அடித்துக் கூறுவார்கள். சகடைக்குள்ளால் பயணம் செய்தே நற்றரையை அடைய வேண்டும் என்றால் அதற்கு ஆயத்தமாகி பயணத்தைத் தொடர்வோம். மக்கள் நலம் நோக்கிய என் பணி தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இறுதி ஓவரில் வீழ்ந்தது இந்தியா
# தொடரை தில்லா வென்றது நியூசி.,

அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட், ஒருநாள் தொடர் வெற்றி, நியூசிலாந்துக்கு எதிராக ஒருநாள் தொடர் வெற்றி என நல்லா போய்க் கொண்டிருந்த இந்திய அணி திடீரென தடுமாறியது. நேற்று நடந்த மூன்றாவது 'ரி20' போட்டியில் வெறும் நான்கு ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதையடுத்து தொடரை வெல்லும் வாய்ப்பு பறிபோனது.

நியூசிலாந்து சென்ற இந்திய அணி மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டிகள் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி நேற்று ஹமில்டனில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோகித் களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் சகாலுக்குப் பதில் குல்தீப் இடம்பிடித்தார்.

### மாற்றம் தந்த குல்தீப்

நியூசிலாந்து அணிக்கு செய்பெர்ட், மன்றோ ஜோடி அபார ஆரம்பம் கொடுத்தது. முதல் 6 ஓவரில் அணி 66 ஓட்டங்களை எட்டியது. குல்தீப் மாற்றம் கொடுத்தார். இவரது பந்தில் தோனியின் துல்லிய 'ஸ்டம்பிங்கில்' செய்பெர்ட் (43) சிக்கினார்.

அரைச்சதம் கடந்த மன்றோ (72), குல்தீப் 'சுழலில்' ஆட்டமிழந்தார். அணித் தலைவர் வில்லியம்சன் 27 ஓட்டங்கள் எடுத்தார். கிராண்ட்ஹோம், மிட்சல் இணைந்து பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். குர்னால் பந்துவீச்சில் கிராண்ட்ஹோம் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். புவனேஷ்வர் 'வேகத்தில்' இவர் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது. ரொஸ் ரெய்லர் (14), மிட்சல் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அதிகபட்சமாக குல்தீப் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### விஜய் மிரட்டல்

கடின இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு முதல் ஓவரிலேயே தவான் (5) 'ஷாக்' அளித்தார். பொறுப்புத் தலைவர் ரோகித்துடன் இணைந்த விஜய் ஷங்கர் மிரட்டினார். ஸ்கொட் வீசிய மூன்றாவது ஓவரில் இவர் இரண்டு பவுண்டரி விரட்டினார். மறுபுறம் ரோகித் நிதானமாக விளையாடினார். சோதி பந்துவீச்சையும் விட்டு வைக்காத தமிழகத்தின் ஷங்கர் இரண்டு சிக்சர் அடித்தார். சான்ட்னர் 'சுழலில்' இவர் 43 ஓட்டங்களில் சிக்கினார். ஒரு கட்டத்தில் இந்திய அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களை எடுத்து எடுத்து நல்ல நிலையில் இருந்தது. ரிஷாப் 28 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

### விக்கெட் சரிவு



வெற்றிக் கிண்ணத்துடன் குதூகலிக்கும் நியூசிலாந்து அணி வீரர்கள்

இதன்பின் விக்கெட் சரிவு தொடங்கியது. மிட்சல் 'வேகத்தில்' ரோகித் (38) வெளியேறினார். இரண்டு சிக்சர் விளாசிய ஹர்திக் பாண்ட்யா (21) நிலைக்க வில்லை. பெரிதும் நம்பப்பட்ட தோனி 2 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். தமிழகத்தின் தினேஷ் கார்த்திக் - குர்னால் பாண்ட்யாவுடன் 'இணைப்பாட்டம்' அமைத் தார். ஸ்கொட் பந்தை கார்த்திக் சிக்சருக்கு அனுப்பினார்.

சௌதி வீசிய கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. வெற்றி கைகூடும் என எதிர்பார்த்த நிலையில், முதல் 5 பந்துகளில் 4 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது. கடைசி பந்தில் கார்த்திக் சிக்சர் அடித்த போதும், வெற்றிக்கு போதவில்லை.

இந்திய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களை எடுத்தது.

4 ஓட்டங்களால் வெற்றி பெற்ற நியூசிலாந்து ஒரு நாள் தொடர் தோல்விக்கு தக்க பதிலடி கொடுத்து 2:1 என்ற கணக்கில் கிண்ணத்தை சுவீகரித்தது.

---

## தடகள ஒளி
## ஊக்குவிப்புச் செயற்திட்டம்

இலைமறைகாயாக இருக்கும்
திறமையான வசதியற்ற
விளையாட்டு வீரர்களை இனங்கண்டு
தேசிய மட்டத்தில் சாதிக்க வைக்கும்
'விளையாட்டின் ஒளி'
ஊக்குவிப்புச் செயற்திட்டத்தின்
முதற்கட்டமான 'தடகளஒளி'
வேலைத்திட்டம் தேசசக்தி குணாளன்
சமூகசேவை அணியின் ஆலோசகர்
A.A ஜாசீர் (J.P) அவர்களின்
நெறிப்படுத்தலில் இன்று முதல் ஆரம்பம்


(C-5455)

தகவல்: தேசசக்தி குணாளன்
சமூக சேவை அணி 076 827 7033

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்

பிறப்பு
1936 - 04 - 23



இறப்பு
2019 - 01 - 12

## அமரர் வல்லிபுரம் கந்தையா தர்மலிங்கம்

நேற்றுவரை எம்மோடு இருந்தீர் அப்பா: எங்களில் ஒருத்தராய் அன்போடு வாழ்ந்தீர்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பீர் என்றிருக்க கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணோடு போனீர் அப்பா ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி ஓடுதையா!
உம் ஆத்மா சாந்தியுற உள்ளமதால் வேண்டுகின்றோம்.

எமது அன்புத் தந்தை அமரர் க.தர்மலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (11.02.2019) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரது இறந்த செய்தி கேட்டு நேரடியாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் தொலைபேசி, இணையம், துண்டுபிரசுரங்கள், கண்ணீர் பதாகைகள், மலர்வளையம் மற்றும் பலவழிகளிலும் உதவி, ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.20/1, பாரதி வீதி, கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (7486)

தகவல்:
குடும்பத்தினர்

---

## அமுதவிழா வாழ்த்து

### திருமதி அன்னசோதி இராமச்சந்திரன்

(அல்லைப்பிட்டி - நல்லூர்)

80 அகவைகள் நிறைந்து அமுதவிழாக்
காணும் ஆசிரிய திலகம்
திருமதி அன்னசோதி இராமச்சந்திரன்
அவர்கள் மேலும் பல்லாண்டுகள்
நல்லூர் முருகன் அருளினால் எல்லா
வளமும் பெற்று நீடூழி
வாழ வாழ்த்துகின்றோம்.



*வாழ்த்துவோர்:*
கலாநிதி செ.திருநாவுக்கரசு
குடும்பத்தினர்
15, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர். (7478)

---

## விண்ணக வாழ்வின்
## 1வது வருட நினைவு அஞ்சலி

### அமரர் செபஸ்தியாம்பிள்ளை
### விக்ரோறியா (மல்லிகா)

மண்ணகம்: 18.08.1943 விண்ணகம்: 11.02.2018

"நீங்கள் கிறிஸ்துவோடு இணைந்து விட்டீர்கள்
உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம்
மறைந்து இருக்கின்றது. கிறிஸ்து தோன்றும்போது
நீங்களும் மாட்சி பொருந்தியவராய் தோன்றுவீர்கள்"
*(கொலோசையர் -3:3-4)*



எங்களை நல்வழிப்படுத்திய எங்கள்
அன்புத் தாயே! பாசத்திலும் அன்பிலும்
இறைபக்தியிலும் சிறந்து
விளங்கினீர்கள். ஆண்டுகள் பல
சென்றாலும் உங்கள் நினைவுகள்
அழிவதில்லை. ஆண்டவரில் உங்கள்
ஆன்மா அமைதி பெற தினமும்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
பழைய வேதக்கோவிலடி,
அல்வாய் வடக்கு, அல்வாய். (C-5454)




# தேசிய அரசை விரும்பாத ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தை நாடும் ஐ.தே.க.

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

'தேசிய அரசாங்கத்தை உருவாக்கி அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பவில்லையென்றால் ஐ.தே.க. உச்ச நீதிமன்றத்துக்குச் செல்லத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிங்கள வாரப் பத்திரிக்கையொன்று மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் அமைக்கும் விடயத்தில் ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிக்கும் பட்சத்தில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்வதன் ஊடாக அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஐ.தே.க. நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அப்பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.



அந்த வகையில் ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்தபின். 48 அமைச்சர்கள் நியமிக்கப்படலாமெனவும் ஆனால் ஜனாதிபதி அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தயாராக இல்லை எனவும் அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)



# சமையலறைக் கழிவுகளை வீடு வீடாகச் சென்று சேகரிக்க யாழ்.மாநகர சபை நடவடிக்கை

## முதல்வர் ஆனல்ட் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு பாரிய பிரச்சினையாக திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம் காணப்படுகின்றமையால், எதிர்வரும் காலங்களில் வீட்டுச் சமையலறைக் கழிவுகளை மாநகர சபை கழிவகற்றும் வாகனத்தின் ஊடாக ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பெற ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்.நகரப் பகுதியில் வீட்டுச் சமையலறைக் கழிவுகளை வீதிகளில் போடுவது மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை வீதிகளில் வீசுவது தொடர்பாக கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் பணிகள் கடந்த 9 மாதங்களாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

பிரதேசத்தின் திண்மக் கழிவுகளை எவ்வாறு அகற்றுவது என்பது தொடர்பாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதன் விளைவாக திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை செழுமைப்படுத்துவதற்காக யாழ்.மாநகர சபையால், 30 மில்லியன் ரூபாய் நிதி இந்த ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலதிக நிதிகள் கிடைக்குமிடத்து பல்வேறு வேலைத்திட்டங்களைக் கண்டறிந்து அவற்றை நடைமுறைப்படுதத் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களைத் தொடர்பு கொண்டுள்ளோம்.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 27 வட்டாரங்களில் 3 வட்டாரங்களை உள்ளடக்கியதாக பிரட்டு அலுவலகம் உருவாக்க தீர்மானித்துள்ளோம்.

தற்போது, 7 உள் ளது. அதை 9 பிரட்டு அலுவலகமாக அதிகரித்து, அதன் ஒவ்வொரு அலுவலகத்திலும், 3 பிரட்டு அலுவலகத்திற்கு ஒரு முகாமைத்துவ உதவியாளரும், தலைமை மேற்பார்வையாளர் மற்றும் வட்டாரத்திற்கு இணைக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டாரத்திற்குரியதுமான தேவைக்கேற்ற வகையில், 10 அல்லது 20 ஆளணி உருவாக்கப்பட்டு வாய்க்காலில் இருந்து வழிந்தோடும் கழிவுநீர்கள், குப்பைகள், வீதியில் வளரும் பற்றைகளை வெட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள்.

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் விசேடமாக ஒரு உழவு இயந்திரத்தை இணைக்கின்றோம். இந்த உழவு இயந்திரம் அதிகாலை 5 மணிக்குப் பிறகு விசேட ஒலி எழுப்பி, மாநகர சபையின் கழிவகற்றும் உழவு இயந்திரம் வருகிறதென பொதுமக்கள் தமது சமையலறைக் கழிவுகளை வாகனத்தில் கொடுக்க முடியும். ஆரம்பத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுத்தாலும், மக்களின் வீடுகளில், துண்டுப்பிரசுரங்களை வழங்கி பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். முதல் காலாண்டில் வட்டாரத்தை முழுமையாக சிறப்பாக தூய்மைப்படுத்தி மக்களிடம் ஒப்படைப்போம். அதன் பின்னர், மக்கள் என்ன செய்ய வேண்டுமெனில், தமது வீடுகளுக்கு அருகாமையில் கழிவுகளைக் கொட்டாதவாறு அவதானிக்க வேண்டும்.

காலை 8 மணிக்கு முன்னர், வீட்டில் சமையலறைக் கழிவுகளை வெளியில் எடுப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், சமையலறைக் கழிவுகள் தவிர்ந்த ஏனைய கழிவு களைக் கண்ணாடி மற்றும் ஏனைய கழிவுப் பொருட் களை, வாராந்தம் எடுப்பதா அல்லது, மாதாத்திற்கு ஒரு முறை எடுப்பதா? என தீர்மானித்து அதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

துர்நாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கழிவுகளை உடனடியாக அகற்றி, ஏனைய கழிவுகளை அகற்ற மாநகர சபையின் அழைப்பு நிலையத்திற்கு அழைப்பை மேற்கொண்டு, கட்டண முறையில், பொது மக்களின் வீடுகளில் இருந்து கழிவுகளை எடுப்போம். இல்லாவிடின், பொதுமக்கள், கழிவுகளை வகைப்படுத்தி, அருகில் உள்ள வட்டார பிரட்டு அலுவலகத்தில் கழிவுகளை கொண்டு வந்து கொடுக்க முடியும். இவ்வாறு இலகு தன்மைகளை ஏற்படுத்துவதன் மூலமாக, கால்வாய்களிலும் வெற்று நிலங்களிலும் வீதிகளிலும் கழிவுகளை வீசி அசௌகரியங்களை ஏற்படுத்தாது, யாழ்.மாநகரத்தை சுத்தமான, பசுமை நிறை நகரத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் முதல்வர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (இ-101)




சுதுமலை வடக்கு தெற்கு கமக்கார அமைப்பு மற்றும் சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞான வைரவர் ஆலய நாவலர் சனசமூக நிலையத்திற்கு பெறுமதியான தளபாடப்பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கிராம மட்ட அமைப்புக்களை மேம்படுத்தும் திட்டத்திற்கு அமைய இந்த தளபாடங்கள் வழங்கப்பட்டன.

# ஹெரோயின் விற்ற பெண் கைது

(புத்தளம்)

புத்தளத்தில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் புத்தளம் தொகுதி போதைத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான 32 வயதுடைய குறித்த பெண் புத்தளம் முள்ளிபுரம், மக்கள்புரம் பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# தந்தை செல்வா நினைவு தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

எஸ்.கே.வி.செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையானது கல்வி மற்றும் சமூக அரசியல் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு தந்தை செல்வாவின் விழுமியங்களின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது.

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த இரு வருடங்களாக மக்களிடையே தந்தை செல்வாவின் விழுமியங்கள், கொள்கைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி, பொதுமக்களிடையேயும் கட்டுரைப் போட்டிகளை நடத்தி வருகிறது.

2019 ஆம் ஆண்டிற்கான போட்டிகளானது மூன்று பிரிவுகளாக நடத்தப்படுகின்றன.

1. வடமாகாண உயர்தர பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி.

2. கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சு மற்றும் சித்திரப் போட்டி.

3. திறந்த கட்டுரைப் போட்டி-இலங்கை முழுவதுமாக பாடசாலை மாணவர்களுக்கான விபரங்கள் ஏற்கனவே உரிய பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

திறந்த கட்டுரைப் போட்டி - வயது வேறுபாடின்றி விரும்பிய அனைவரும் பங்குபற்ற முடியும்

- திறந்த போட்டியாளர்கள் பின்வரும் தலைப்புக்களில் விரும்பிய தலைப்பை தெரிவு செய்து 400-500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுதல் வேண்டும்.

1. தமிழ் மக்களின் அரசியல் வழிநடத்துதலில் தந்தை செல்வாவின் வகிபாகம்.

2. தந்தை செல்வாவின் பன்முக ஆளுமை.

- கட்டுரைகளை அனுப்புபவர்கள் தங்களது முழுப் பெயரை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுமாறு வேண்டப்படுவதுடன் அறக்கட்டளையானது போட்டியாளர்களைத் தொடர்பு கொள்வதற்கு உதவியாக தமதுமுகவரியையும்தொலைபேசி இலக்கத்தையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
- பங்குபற்றிய அனைவருக்கும்அறக்கட்டளையால் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

தந்தை செல்வா நினைவு அறக்கட்டளை, தந்தை செல்வா இல்லம், தந்தை செல்வா வீதி, தெல்லிப் பழை, யாழ்ப்பாணம்.

கட்டுரை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 05.03. 2019. போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு செ.கமலதாஸ் 077 004 4596 தொடர்புகொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இராசி பலன்

11.02.2019

தை 28, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சஷ்டி முற்பகல் 11.50 மணிவரை

அச்சுவினி மாலை 5.51 மணிவரை

சுபநேரம் 12.34-2.04 மணிவரை

இராகுகாலம் 8.04-9.34 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | செவ் சந் | | |
| புத | இராசி பலன் | | ராகு |
| சூரி, கேது | சந்திராஷ்டமம் சித்திரை, சுவாதி | | |
| சனி, சுக் | குரு | | |

**மேடம்:** கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** சேமிப்பில் சிறிது கரையலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

**கடகம்:** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும்நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றை தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பணயங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறலாம், போசனசுகமுண்டு.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ் கூடும்நாள், மனக்குழப்பம் அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், செய்தொ[illegible] மேன்மையுண்டு.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கும்பம்:** தொழிலை முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலம-ாக. நடந்து

# இராணுவத்தினர் அச்சுறுத்தல்

# தமது போராட்ட இடத்தை தறப்பாளால் மறைத்துள்ள கேப்பாபிலவு மக்கள்







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் 59 ஆவது இராணுவ படை கட்டளை தலைமையாக இராணுவ அச்சுறுத்தல் காரணமாக தமது போராட்ட இடத்தை தரப்பாள் கொண்டு மறைத்து கேப்பாபிலவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கேப்பாபிலவு மக்களது பூர்வீக வாழ்விடம் கோரிய போராட்டமானது இரண்டு வருடகாலமாக இடம்பெற்று வருகிறது. கடந்த 2017 பங்குனி முதலாம் திகதி ஆரம்பித்த இந்த தொடர் போராட்டம் எதிர்வரும் பங்குனி முதலாம் திகதி இரண்டு வருடத்தை நிறைவு செய்து 3 ஆவது வருடத்தை எட்டுகிறது. இது வரை பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து தமது சொந்த நிலம் மீட்கும் வரை எமது போராட்டம் தொடரும் என்ற நிலைப்பாட்டுடன் போராடி வரும் மக்களை பொலிஸார், இரா ணுவத்தினர் பல்வேறு வகையில் துன்புறுத்தி வருகின்றனர்.

இராணுவத்துக்கு சார்பாக பொலிஸார் செயற்பட்டு பல தடவைகள் தம்மை நீதிமன்றம் கொண்டு சென்றும் தமது நியாயமான ஜனநாயக போராட்டத்துக்கு நீதிமன்று அனுமதித்துள்ளது. இருப்பினும் எம்மை அச்சுறுத்தி மன ரீதியில் பாதிப்படைய செய்யக்கூடிய வகையில் இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் வீடியோ புகைப்படம் எடுப்பது தொடர்பில் மக்கள் தமது அதிருப்திகளை தொடர்ந்தும் தெரிவித்தனர். இந்நிலையில் இராணுவம் தனது முகாமுக்கு முன்பாக 360 பாகையும் சுழலக்கூடிய அதிநவீன கமராவை பொருத்தி தமது போராட்டத்தையும் போராட்டத்தில் ஈடுபடும் பெண்களையும் வீடியோ புகைப்படம் எடுப்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது போராட்ட இடத்தை மறைக்க வேண்டிய நிலையில் தறப்பாள் கொண்டு தமது போராட்ட இடத்தை மறைத்து போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (7-281)




# மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டல்





(மன்னார்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரிக் கிராம திட்டத்திற்கமைவாக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராமங்களில் புதிய வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

எனினும் அழைக்கப்பட்ட அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை என தெரிய வந்துள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் குறித்த வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள 24 வீடுகள், பட்டித் தோட்டம் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள 26 வீடுகள் மற்றும் மன்னார் சின்னக்கடை பகுதியில் அமைக்கப்படவுள்ள 18 வீடுகளுக்கு ஆரம்பகட்டமாக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளில் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி. கனகாம்பிகை சிவசம்பு, கிராம அலுவலர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.ராதா பெனாண்டோ, மன்னார் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 68 வீடுகள் அமைக்கப்படவுள்ள நிலையில் இவ்வாறு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவில் நாடளாவிய ரீதியில் 2500 மாதிரிக் கிராமம் அமைக்கப்படவுள்ள நிலையில் குறித்த வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இவ்வாறு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வுகளுக்கு வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (7-285)

# ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் அதிர்வுகள் நூல் அறிமுக விழா





(மன்னார்)

ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய கால அதிர்வுகள் நூல் நேற்று முன்தினம் சனிக்கிழமை 9 ஆம் திகதி காலை மன்னாரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் நகர மண்டபத்தில் அந்த சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் எஸ்.ஜே. நிக்சன் குரூஸ் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்டதோடு, பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மற்றும் விருந்தினர்களாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த நூல் வைபவ ரீதியாக வெளியீடு செய்யப்பட்டது. குறித்த வெளியீட்டு நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (7-285)

# நெல் கொள்வனவை அதிகரிக்க வேண்டும்

## வடமாகாண விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

வடமாகாணத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை மட்டுப்படுத்தாமல் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நெல் அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் விவசாயிகள் தமது அறுவடை செய்யப்பட்ட நெல்லைச் சந்தைப்படுத்துவதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.

விவசாயி ஒருவர் ஏறக்குறைய 10 ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட நெல்லை அறுவடை செய்யக்கூடியதாக இருந்த போதும் நெல் சந்தைப்படுத்தல் சபை ஒரு விவசாயிடமிருந்து 2 ஆயிரம்கிலோவை மட்டுமே கொள்வனவு செய்வதாக சுட்டிக்காட்டினர்.

மேலும் கடந்த வருடம் இரணைமடுக்குளம் வான் பாய்ந்ததில் அதனை அண்டிய பிரதேச வயல்களின் நெல்லின் நிறம்மாறிக் காணப்படுவதாகவும் அதனைக்கொள்வனவு செய்வதற்கு நெற்சபை மறுத்து வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நிறம் மாறிய நெல்லினை உடைத்து பார்த்த போது அரிசி தரமாக இருப்பதாகத் தெரிவித்த விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் சபையும் பரீட்சித்துப் பார்த்துக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)





மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வறுமை தடையாக அமைந்துவிடக்கூடாது எனும் நல்நோக்குடன் சமூகப் பணிகளை முன்னெடுக்கும் "தோள்கொடுக்கும் தோழமைகள் - பிரித்தானியா"யினரின் பூரண நிதிப் பங்களிப்புடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் அண்மையில் வெள்ளப்பெருக்கின் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களினைச் சேர்ந்த சுமார் 1200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டமாக மன்னார் மாவட்டத்தின் வறுமைக் கோட்டிற்குட்பட்ட தேத்தாவடி கிராமம், கள்ளியடி பாடசாலை, பாப்பாமோட்டை கிராமம், சோதிநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 400 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# யாழ். மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## நவகுண்ட பக்ஷ மஹா யாக புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்புதழ்-2019

### வேழ முகத்து விநாயகரை தொழ வாழ்வும் மிகுந்து வரும்!

முழுமுதல்தெய்வமாம்ஸ்ரீவீரகத்திவிநா யகர் பெருமான் அடியவர்களின் குறைதீர் த்து மகிழ்வான வாழ்விற்கு வழி சமைக்கும் அக் கணபதிப் பெருமானுக்கு அழகிய புதுப் பொலிவின் தோற்றத்தில் ஆலயம் அமையப் பெற்று மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடந்திடவும் புனிதமும் பக்தியும் புண்ணியமும் அன்பும் சிறந்து விளங்கிடவும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**

**"சுபம்"**

**ஆலயப்பிரதமகுரு, பிரதிஷ்டா கிரியா விற்பன்னர், சிவஸ்ரீ நா.குகநேசக்குருக்கள்.**

### வாழ்த்துச்செய்தி

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயக் கும்பாபிஷே கம் நடைபெறுவது தீவுப்பகுதி மக்க ளுக்குகுறிப்பாக மண்கும்பான்-வேலணை மக்களு க்கு மிகுந்த மன நிறைவையும் உற்சாகத் தையும் கொடுக்கும் நிகழ் வாகும். இவ்வால யத்தில் குடிகொண்டு இருக்கும் விநாயகர் மிகு ந்த அருள்பாலிப்பார். உள்ளூர் மக்கள் மாத்திரமல்ல வெளிநாடு களில் வாழும் தீவக மக்களும் இவ்வாலயத்தில் நிறைவான பற்றும் நம்பிக்கையும் கொண்டவர்கள். யாழ்ப்பாணத்துக்கு பண்ணை வழியாகவா அல்லது அராலி வழியாக பாதை அமைக்க வேண்டு மென்று இழுபறையில் அன்றைய தலைவர்கள் இவ்வாலயத்தில் பூக்கட்டி வந்த முடிவுபின் பிரகாரம் தீர்மானம் எடுத்தனர்.

இவ்வாலயம் 1960களுக்கு பக்தி மிகுந்த அடியார்களைக் கொண்ட சிறுவாலயமாக இருந்தது. 1961 இற்குப் பின்னர் மண்கும்பான் மக்கள் மணல் வர்த்தகத்தால் பெரும்செல்வம் ஈட்ட இவ்வாலயம் வளர்ச்சி கண்டது. எனினும் 1991-1996 இற்கு இடைப்பட்ட காலத்தில் தீவகத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்ததால் நித்திய பூசைகள் இடம் பெறவில்லை. 1996 இற்குப் பின்னர் மண்கும்பான் வர்த் தகர்களினதும் பிறநாடுகளில் வாழும் மண்கும்பான் மக்க ளின் நிதியுதவிகளினாலும் அர்ப்பணிப்பான திருப்பணி களாலும் ஆலயம் இன்று சிறந்த பௌதீகக் கட்டமைப் பைப் பெற்றுள்ளது. ஆலயத்தின் இராஜகோபுரத்தை பல மைல் தூரங்களிலிருந்தும் பார்க்கக் கூடியதாக இருக் கிறது.

இவ்வாலயத்தை பல்வேறு வழிகளில் மேம்பாடு அடையச் செய்த அடியார்கள் திருப்பணிகளை மேற்கொண்ட சபையினர் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். விநாயகர் அருள் யாவருக்கும் கிடைக்குமாக.

**பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
**வாழ்நாள் பேராசிரியர்/முன்னாள் துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



### வாழ்த்துச்செய்தி

தொன்மையும் பெருமையும் வாய்ந்த மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலயத்தில் 11.02.2019 ஆம் திகதி அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடை கின்றேன். கணங்களிற்கெல்லாம் அதிபதியாகவும் தனக் கொரு தலைவன் இல்லாத தலைவனாகவும் விளங்கி நிற்கும் விநாயகப் பெருமான் சைவசமயத்தவர்களின் இறை வழிபாட்டில் முதன்மை பெறுகின்றனர்.

ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய, காமிக கிரியைகள் யாவும் அடியார்களின் உடல், உள ஆரோக்கியம், சமூக ஒற்றுமை, பக்தி போன்ற அனைத்து நன்மைகளிற்கும் அடிப்படையாக அமைகின்றன. இவ் ஆலயத்தில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேக நிகழ்வானது மண்கும்பான் மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து அடியவர்களிற்கும் அருட்பிரவாகத்தை நாட்டில் சாந்தி, சமாதானம் சிறக்க எல்லாம் வல்ல வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தாள் பணிந்து கும்பாபிஷேகம் சிறக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.அம்பலவாணர் சோதிநாதன்,**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை.**

### தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவரின் ஆசியுரை

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

எமை எல்லாம் தனது திருப்பெருங் கருணையினால் அருளாட்சி செய்து கொண் டிருக்கின்ற யாழ்.மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயக தேவஸ்தான நவகுண்ட பக்ஷ மஹா புனராவத்தன பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேக விஞ்ஞாப னமானது இன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டி ருப்பது விநாயகப் பெருமானின் திருவருட் சிறப்பேயாகும்.

அந்த வகையில் இக் கும்பாபிஷேக நிகழ்விற்கு முன்னதாக வானளாவ வளர்ந்து எம் பெருமானின் திருவொளி காட்டி நிற்கும் இராஜகோபுரம், தேர்த்தரிப்பிடம், அமுத சுரபியாக நிற்கும் அன்னதான மண்டபம், வசந்த மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், வெள்ளிதோறுமான ஒப்பற்ற அன்னதானம் என்பன தனித்தனித் திருப்பணியாகவும் அடியார்களின் ஒன்றிணைந்த திருப்பணியாகவும் நிறைவுபெற்று நிற்பது விநாயகப் பெருமானின் பெருங்கருணையே.

அதன் பின்னதாக இப் பெரும் மஹா கும்பாபிஷேகத்தினையொட்டி அமைக்கப்பட்ட புத்தம் புதிய வைரவப் பெருமானின் ஆலயம் மூசிக, பலிபீட புனருத்தாரணம், வெளிப்புற மணி மண்டபம், உட்பிரகாரத்தின் முன் புறமாக அமைக்கப்பட்ட அழகு நிறை திருமண்டபம் என்பன போன்ற புதுப்புது திருப்பணிகளும் நிறைவு பெற்று வர்ணந்தீட்டப்பெற்று, அழகு நிறைந்த, புதுமை நிறைந்த, புனிதம் நிறைந்த அருட்பதியாகக் காட்சி தரும் எம் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தினை காண நேரிலும் இன்னும் வலையத்தளங்களினூடாகவும் காணக் கிடைத்திருப்பது எம்பெருமானின் திருப்பெருங்கருணையே.

இவ்விதமான பெரும் பணிக்கு தனித்த முறையில் ஆலயப் பணிகளை ஏற்று அமைத்துத் தந்த அடியவர்களுக்கும் ஒன்றுபட்டு நின்று பொது நிதியாக வழங்கி நின்ற திருப்பணிகளுக்கும் உள்ளாகி நின்ற அடியவர்களுக்கும் இன்னும் எம்பெருமான் ஆலய அனைத்து விழாக்களுக்கும் இவ் விழாவிற்கு முன்னும் பின்னுமாக அன்னதானப் பணி, தாக சாந்தி போன்ற இணையற்ற பணியாற்றும் உபயகாரர், தொண்டர்களுக்கும் மேலும் இன்று இந்தக் கும்பாபிஷேகத்தினை முன்னெடுத்து நிற்கும் என்னுடனான பரிபாலன சபையினருக்கும் திருப்பணிக் குழு உறுப்பினர்களுக்கும் எம்பெருமான் அடியவர்களுக்கும் தினசரி நித்திய பூசை முறைகளை ஒழுங்குற ஆற்றும் ஆலய குருக்கள் அவர்களுக்கும் இன்று இக்கும்பாபிஷேகத்தினை பிரதம குருவாக நின்று செயற்படும் பிரதிஷ்டா பிரதமகுரு அவர்களுக்கும் அவருடான ஏனைய குருமார்களுக்கும் இன்னும் இக் கும்பாபிஷேகத்திற்கான யாகசாலை அமைப்பாளர்கள், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், சுவாமி அலங்கார அமைப்பாளர்கள், கட்டட வடிவமைப்பினர், கருங்கல் கொத்துவேலைப் பணியினர், வர்ண வேலை அமைப்பாளர்களுக்கும் இன்னும் இக்கும்பாபிஷேக நிகழ்விற்குப் பின்னதாக நடைபெறவிருக்கும் மண்டலாபிஷேக உபயகாரர்களுக்கும் எமது ஆலய மற்றைய விழா உபயகாரர்களுக்கும் ஆலய தொண்டர் அமைப்பினருக்கும் அடியவர்களுக்கும் மேலும் எம்பெருமானின் திருவருளைப் போக்குவரத்தினூடாக பெற்றுச் செல்லும் அடியவர்களுக்கும் எம்பெருமானின் வற்றாத திருப்பெருங்கருணை நிறைவாக அமைய வேண்டுவதோடு, எல்லோர்க்கும் இறையாசியும் அடியேனின் பணிவான ஆசியும் கிட்ட பணிவோடு எம்பெருமானின் திருவடியை பணிவதோடு, எம் பெருமானின் தேவஸ்தானத்தின் பின்னராக பூர்த்தி செய்யப்பட வேண்டிய திருப்பணிகளை நிறைவு செய்ய இறையருளையும் எம்பெருமான் அடியவர்களின் வழமையான மன அருளையும் வேண்டி எம் பெருமான் திருவருளால் அனைவருக்கும் நிறைவாழ்வு கிட்ட ஆசி கூறி நிறைவு செய்கின்றேன்.

**தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர்,**
**நடராசா தனபாலசிங்கம்.**


















# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 608 சிறுவர்களுக்குத் தண்டனை

## பொலிஸ் குற்றவியல் பிரிவு தகவல்

(கொழும்பு)

**நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாகத் தண்டனைகளை அனுபவித்தவர்களில் 608 பேர் சிறுவர்கள் எனப் பொலிஸ் குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இக் குற்றச் செயல்கள் பட்டியலில் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டமைக்காக கைது செய்யப்பட்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவை தண்டனை அனுபவித்தவர்களாக உள்ளனர்.

இக்குற்றச்சம்பவங்களில்கொலை, கொள்ளை தாக்குதல், பாலியல் துஷ்பிரயோகங்கள் அடங்குகின்றன.

இலங்கையில் வருடாந்தம் 100 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் இந்தப் பட்டியலில் உள்ளடங்குவதாகவும் அவர்களில் 11-20 வயதுக்குட்பட்டவர்களே அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் சிறுவர்களை அவதானிக்கும் போது சைக்கிள், மடிக்கணனி, தொலைபேசி மற்றும் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளைத் திருடியவர்களாகக் காணப்படுகின்றனர்.

எனவே சிறுவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் நோக்கில் பொலிஸ்மா அதிபரின் வழிநடத்தலின் கீழ் விசேட திட்டமொன்றைத் தயாரிக்கவுள்ளதாகப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-10)

# யார் துரோகி என்பதை தமிழ் மக்கள் இன்று புரிந்துகொண்டுள்ளனர்

## நல்லூரில் டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது மக்களை தீரா துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கியவர்கள் துரோகிகளா? அல்லது அத்தகைய துன்பங்களிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் எனப் போராடிய நாம் துரோகிகளா? யார் துரோகிகள் என்பதை வரலாறு நிரூபித்து வருகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொக்குவில் கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பின்போது மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்றிந்தபின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் மக்களின் எதிர்கால நலன்களை முன்னிறுத்தி அவர்களது அரசியல் மற்றும் அபிவிருத்தி சார் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்ற நோக்குடனேயே எமது அரசியல் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் அவலங்களையும் துயரங்களையும் சந்தித்த போதெல்லாம் அவர்களது நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய அரசுடன் போராடி வடபகுதி மக்களிடமிருந்து பறிக்கப்படவிருந்த காணி அபகரிப்புகள், அரசியல் கைதிகள் விடுதலை, அரசியல் பிரதிநிதித்துவ குறைப்பு போன்ற பல உரிமைகளையும் அவர்களுக்கான தேவைப்பாடுகளையும் அபிவிருத்திகளையும் பெற்றுக் கொடுத்து இன்று வடக்கில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தவர்கள் நாம். ஆனால் தமது அரசியல் சுயநலன்களுக்காக தமிழ் மக்களை பணயம் வைத்து அவர்களது துன்ப துயரங்களை வைத்து அரசியல் நகர்வுகளை செய்து எமது மக்களை நடுத்தெருவில் நிற்கும் நிலைக்கு கொண்டுவந்தவர்கள் இன்று தம்மை உத்தமர்கள் என காட்டிக் கொண்டு மக்களிடம் தேர்தல் அரசியல் செய்து வருகின்றனர்.

நாம் ஒருபோதும் தேர்தல் அரசியல் செய்தது கிடையாது. இனியும் அவ்வாறான ஒரு அரசியலை செய்யவும் போவது கிடையாது. ஆனால் எமது மக்கள் தாம் இன்றுவரை அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கு ஒரு நிரந்தர தீர்வு வேண்டும் என்ற தெளிவு கொண்டு வருங்காலத்திலாவது எமது கரங்களுக்கு தமது அரசியல் அதிகாரப் பலத்தை தருவார்களேயானால் நாம் மக்கள் படுகின்ற அவலங்களுக்கு நிரந்தரத் தீர்வை மட்டுமல்லாது எமது இனத்தின் அரசியல் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

எமது அரசியல் நகர்வுகளே யதார்த்தமானது என மக்கள் உணர்ந்து எமது கட்சியின் பின்னால் அணிதிரள்வதை தடுக்கும் நோக்கிலேயே எமது கட்சி மீதும் என் மீதும் கடந்த காலங்களில் பல்வேறுபட்ட அவதூறுகள் பரப்பப்பட்டு வந்தன.

ஆனாலும் அவை ஒவ்வொன்றும் இன்று யாரால் செய்யப்பட்டது என்பதை நீதிமன்றம் வெளிப்படுத்தி வருவதனூடாக நாம் நேர்மையானவர்கள் என்பதை வரலாறு நிரூபித்து வருகின்றது.

அந்தவகையில் தமிழ் மக்களின் இன்றைய அவல வாழ்வுக்கு வழிவகை செய்து அவர்களை நிர்க்கதி நிலைக்கு உள்ளாக்கியவர்கள் மீண்டும் அதே வேலைத் திட்டத்தையே முன்னெடுத்து வருகின்றனர். மத்தியில் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு செலுத்துவதற்குப் பக்கபலமாக இருந்துகொண்டு அந்த அரசுக்கு முண்டு கொடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவர்களது மூன்றரை வருட ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கான தேவைப்பாடுகள் எதைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்கள்? தம்மை நல்லவர்களாகக் காட்டிக்கொண்டு மக்களுக்கு நலன்கள் செய்பவர்களை துரோகிகளாக்கி தமிழ் மக்களது வாக்குகளை அபகரித்து தமது சுயநலன்களைத் தக்கவைத்துக் கொண்டதைத் தவிர அவர்களால் எதைச் செய்ய முடிந்தது? ஆனால் நாம் அவ்வாறு மக்களை ஏமாற்றியது கிடையாது.

எமது கட்சிக்கு உறுதிமிக்க ஒரு கொள்கை உண்டு. அந்த நேரிய கொள்கையிலிருந்து நாம் மாறியதும் கிடையாது இனியும் மாறப்போவதும் கிடையாது. எமது மக்கள் நிரந்தரமான ஒளிமயமான வாழ்க்கையை வாழ நாம் என்றும் அவர்களுக்காக உழைக்கத் தாயாராக இருக்கின்றோம். அதற்கான அரசியல் பலத்தை தமிழ் மக்கள் எமக்கு வழங்குவார்களேயானால் வெகு விரைவில் இந்த நிலையை உருவாக்கிக் காட்ட எம்மால் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதன்போது கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளர் கா. வேலும்மயிலும் குகேந்திரன், கட்சியின் நல்லூர் பிரதேச நிர்வாகச் செயலாளர் அம்பலம் இரவீந்திரதாசன் மற்றும் கட்சியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குறை'களை' பதிகம் 15

# ஆலடிப் பிள்ளையாரின் வீதி செப்பனிடப்படுமா?

குறை களைப் பதிகத்தில் வேண்டிய
குறைகளைப் பதியலாமாயினும்
பதிகம் என்பது பத்துப்பா உடையதே
பதித்த பதிகங்களில் பத்துப்பா இல்லை

அதனால் பதிகத்தை நழுவிப் பாடுகின்றேன்
பருத்தி மா நகரின் மேலைப் புலோலியில்
அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் பற்றி
ஒரு சில வார்த்தைகள் ஓதுவன் யான்

தலம் மூர்த்தி தீர்த்தம் நிறைந்தோன்
நலம் நல்கும் வல்ல விநாயகன்
வினை தீர்க்கும் எமதாலடிப் பிள்ளையார்க்கு
அனைத்து வளங்களும் அழகுற அமைந்தாலும்

குறுந்தூர முகப்பு வீதியது முற்றாகவே
அறுந்து போய் குண்டும் குழியுமாய்
துறந்தது கற்களுடன் தார் பூச்சதனையும்
சிறந்த ஹாட்லியும் மெதடிஸ்சும் கோயில் சூழலில்

திறமான அவற்றின் விளையாட்டரங்குகள் மிக அருகில்
ஆலய முகப்பு வீதியே மைதானங்களுக்கும் வழியாகும்
பருத்தி நகர சபை வளாகமும் அண்மையானதே
நகர சபையினரின் நகரத் திட்டங்கள் பல கண்டோம்

நகர பிதாவுக்கும் மைந்தருக்கும் நன்றிகள்
நகர பிதாவுக்கு அன்பான வேண்டுதல்
ஆலடி முகப்பு வீதியை அவசரம் சீர் செய்க
ஆலடிப் பிள்ளையார் அருள்புரிவார் தப்பாமல்

லயன் மு.தர்மலிங்கம் (J.P)
பருத்தித்துறை.

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை சொந்தப் பெயரில் பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 160 | 150 | 200 |
| தக்காளி | 80 | 70 | 60 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 60 | 55 | 60 |
| கரட் | 120 | 120 | 120 | 70 | 120 |
| பூசணி | 40 | 30 | 20 | 20 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 80 | 90 | 70 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 120 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 50 | 120 |
| கருணைக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 120 | 120 | 100 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 30 | 40 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 500 | 400 | 60 |
| போஞ்சி | 100 | 70 | 80 | 50 | 100 |
| கத்தரிதம்பள்ள | 50 | 40 | — | 40 | 100 |
| கீரை-1பிடி | 80 | 20 | 30 | 10 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 100 | 130 | 120 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 40 | 60 | 40 | 80 |
| முள்ளங்கி | 80 | 30 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 45 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 50 | 40 | 80 |

# தமிழ் மொழியின் தொன்மையை உணர்ந்து பாதுகாக்க வேண்டும்

## கோடீஸ்வரன் வலியுறுத்து



(கல்முனை)

உலகில் முதன்முதல் தோன்றிய மனிதன் இலங்கையிலேயே பிறந்தான் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் அருட்தந்தை செபமாலை சந்தியாகு அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், உலகில் முதன்முதல் தோன்றிய மனிதன் இலங்கையிலேயே பிறந்தான். அந்தவகையில் தமிழர்களாகிய நாங்கள் பெருமை கொள்ள வேண்டும்.

தமிழ் மொழி என்பது பூர்வீகம் கொண்ட முதுமையான செம்மொழியாக இருந்து வருகின்றது.

தமிழ் மொழியை பல உலக நாடுகள் பேணி கடைப்பிடித்து வருகின்றமை ஏனெனில் உலகில் தோன்றிய மொழிகளில் தமிழ் மொழி முதன்மையானது.

மேலைத்தேய நாடுகளில் தமிழ் மொழியும் கலாசாரங்களும் இப்பொழுது பரவிக்காணப்படுவதோடு பேணி கடைப்பிடித்து வருவதற்கான காரணி உலகில் தோன்றிய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்பதனாலாகும்.

தமிழர்கள் தமிழ் பேசுகின்ற மக்கள் ஒவ்வொருவரும் தமிழர் மரபினை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். தமிழ் மொழியின் தொன்மையை உணர்ந்து சரியாக பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மதூஷை இலங்கைக்கு கொண்டுவர அரசியல்வாதிகள் சிலர் தடை-ஹேரத்

(மாவனெல்ல)

மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட பாதாளக் குழுவினரை இலங்கைக்குக் கொண்டு வந்து. அவர்களுக்கெதிராக இலங்கையின் சட்டதிட்டங்களைப் பிரயோகிக்க அரசியல்வாதிகள் சிலர் இடமளிக்கவில்லையென மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாவனெல்லயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மதூஷ்க்கு எதிராக சரியான முறையில் சட்டம்நிறைவேறும் என எம்மால் கூற முடியாது. ஏனெனில் இவரைப் போன்ற பல போதைப் பொருள் வர்த்தகர்கள் இதற்கு முன்னரும் இலங்கையில் கைதுசெய்யப்பட்ட போதிலும் அவர்களுக்கு எதிராக சட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை. எனவே மதூஷ்ம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டால் இந்த நிலையே ஏற்படும்.



அத்துடன் டுபாயில் வழங்கப்படும் தீர்ப்பு இலங்கையை விட சிறந்தது என்பதுடன் மதூஷ் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டால் அவரைக் காப்பாற்ற இலங்கையின் அரசியல்வாதிகள் பலர் இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்திறப்பும் நடமாடும் சித்த வைத்தியசேவை ஆரம்பமும்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்திறப்புவிழாவும் நடமாடும் சித்தவைத்திய சேவை ஆரம்ப நிகழ்வும் இன்று முற்பகல் 10 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தி.விக்கினஜெயம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத்தவிசாளர் த.நடனேந்திரன் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் திருமதி து.சியாமா, வலி. மேற்கு உதவிப்பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன், கௌரவ விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களான வைத்தியர் செ.பரமசிவம்பிள்ளை, சி.பாலகிருஸ்ணன், வி.தீபிகா ஆகியோர் கலந்து கொள்வார். (இ-7)

# 3 அம்சக் கோரிக்கைளை முன்வைத்து இலங்கையை சுற்றிய சைக்கிள் ஓட்டம்

(வவுனியா)

மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து வவுனியாவைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதாபன் ஆரம்பித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியா கோயில்குளம் சிவன் ஆலயம் முன்பாக இச்சாதனை துவிச்சக்கரவண்டி பயணத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார்.

இந்த துவிச்சக்கரவண்டிப் பயணம் 2125 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டமையவுள்ளதுடன், மார்ச் மாதம் 13 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழத்தில் நிறைவுறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாவைச் சேர்ந்த கலைஞரான த.பிரதாபன் கடந்த காலங்களிலும் பல்வேறு கோரிக்கைகளை



முன்வைத்து இலங்கையை சுற்றி மோட்டார் சைக்கிளில் பயணித்திருந்ததுடன் வடக்கு மாகாணத்தைச் சுற்றியும் துவிச்சக்கரவண்டியில் பயணித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது, பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினை தனிப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும், லயன்களில் வாழும் மலையக மக்களுக்கு தனித்தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும், தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றும் தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பள உயர்வை வழங்க வேண்டும் உள்ளிட்ட மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து குறித்த பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகரசபை உறுப்பினர்களான சேனாதிராஜா, சந்திரகுலசிங்கம், சு.காண்டீபன் மற்றும் சிவன் கோவில் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீதியைப் புனரமைக்குமாறு துணுக்காய் மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புத்து வெட்டுவான் ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களுக்கான 12 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதியினை புனரமைத்து தருமாறு மேற்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தேறாங்கண்டல் ஐயன்கன்குளம் பழைய முறிகண்டி, மருதன்குளம், புத்துவெட்டுவான் உள்ளிட்ட கிராமங்களுக்கான பிரதான வீதியாக காணப்படும் கொக்காவில் துணுக்காய் வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் தமது போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மேற்படி வீதியினை புனரமைத்து தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமங்களுக்கான பிரதான வீதியாக காணப்படும் கொக்காவில் துணுக்காய் வீதியின் கொக்காவில் சந்தியிலிருந்து புத்து வெட்டுவான் வரையுமான இரண்டு கிலோ மீற்றர் வரையான வீதியே தற்போது புன்ரமைக்கப்பட்டாலும் அதுவும் புனரமைக்கப்பட்டு ஓரிரு மாதங்களில் சில இடங்களில் சேதமடைந்துள்ளன.

இதனைவிட, இன்னமும் 12 கிலோமீற்றர் வரையான வீதி எந்தவித புனரமைப்புக்களும்இன்றி காணப்படுகின்றது. இதனால் சாதாரண துவிச்சக்கர வண்டிகளில் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ள பிரதேச மக்கள் கடந்த வெள்ளத்தின் போது தமது கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் மூன்றுநாட்களுக்கு மேலாக தடைப்பட்டு காணப்பட்டன எனத் தெரிவித்துள்ள பிரதேசமக்கள் தமது கிராமத்திற்கான பிரதான வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (7-315)

# கம்பரெலியத் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் கம்பரெலியத்திட்டத்தின் கீழ் 126 வேலைத்திட்டங்கள் 137.4 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினாலும் ஆழிப் பேரலையினாலும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறுபட்ட தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில்கம்பரெலியத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 126 வேலைத்திட்டங்கள் 137.4 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் சிபாரிசுகளுக்கு அமைய 21.3 மில்லியன் ரூபா செலவிலும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் சிபாரிசுக்கு அமைய 93.1 மில்லியன் ரூபா செலவிலும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் சிபாரிசுகளுக்கு அமைய 23 ஆயிரம் செலவிலும் என சுமார் 137.4 மில்லியன் ரூபா செலவில் 126 வேலைத்திட்டங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுரைப்பற்று புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்படி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (7-315)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா:32
உயரம்:5’7”
தகைமை/தொழில்:A/L , Electrician
எதிர்பார்ப்பு: A/L
தொ.இ: B/9260

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:மூலம் 3
உயரம்:5’2”
தகைமை/தொழில்O/L, சொந்த தொழில்
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9262

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 25
உயரம்:5’4”
தகைமை/தொழில்: O/L, சுவீடன் PR
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9263

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 3
உயரம்:5’4”
தகைமை/தொழில்: O/L,வியாபாரம்
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/9265

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 1
செவ் 8 ல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்:A/L,வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரசதனியார் சொந்த தொழில்
தொ.இ: G/9296

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:4செவ் 12 ல்
தகைமை/தொழில்:B.Sc ஆசிரியர்
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9298

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா:44செவ் 8 இல்
உயரம்:153cm
தகைமை/தொழில்;BFA பட்டதாரி, அபிவிருத்திஉத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரசதொழில்
தொ.இ: G/2231

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:திருவோணம் 4
கி.பா: 41 செவ் 4 இல்
உயரம்:5’4”
தகைமை/தொழில்B.Sc,M.Sc, Engineer
எதிர்பார்ப்பு:Doctor,Engineer,பட்டதாரி உத்தியோகம்
தொ.இ: G/2262

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நாட்டின் ஒற்றையாட்சி இறையாண்மைக்கு புதிய அரசியலமைப்பால் பாதிப்பு வராது

## நீதியமைச்சர் தலதா திட்டவட்டம்

(கொழும்பு)

நாட்டின் ஒற்றையாட்சி, இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் புதிய அரசியலமைப்பைத் தயாரிக்க ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் முயற்சிக்கப் போவதில்லை என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய அரசியலமைப்புக்கான சட்டமூலம் கூட தயாரிக்கப்படாத நிலையில் கூட்டு எதிர்க்கட்சியினர் அது தொடர்பில் பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

விகாரைகளுக்கு சென்று தேரர்களிடமும் முறையிடுகின்றனர். அரசாங்கம் தொடர்பில் விமர்சிப்பதற்கு எதுவும் இல்லாத



காரணத்தினாலே இல்லாத அரசியலமைப்பு தொடர்பாக தெரிவித்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

பலாங்கொடையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# பால்மா சர்ச்சைக்குத் தீர்வுகாண தெரிவிக்குழு அமைக்க வேண்டும்

## பந்துல வலியுறுத்து

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா தொடர்பில் தற்போது எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு முறையான தீர்வு கிடைக்கப் பெறவேண்டுமாயின் சிறப்பு துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவு குழுவை நியமிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் புத்திக பத்திரன முன்வைத்த குற்றச்சாட்டை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன ஒரு சில விடயங்களை மையப்படுத்தியே நிராகரித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் இதுவரை காலமும் எவ்விதமான துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய விசாரணைகள் இடம்பெறவில்லை. ஆகவே இவ்விடயம் இன்று மக்களின் சுகாதாரத்துடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார். (இ-7)

# துப்பாக்கிச் சூட்டில் சுதுஹகுரு சுமித் பலி

## ஒருவர் வைத்தியசாலையில்

(தனமல்வில)

தனமல்வில பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 12.20 மணியளவில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நபர்களினால் இருவர் மீது இவ்வாறு துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் 42 வயது சுதுஹகுரு சுமித் எனும் வசந்த என்பவரே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் சம்பவத்தில் காயமடைந்த 22 வயதுடைய இளைஞன் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தில் உயிரிழந்த நபர் 4 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(மாத்தளை)

பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, ஓய்வு பெற்ற பாடசாலை ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மாத்தளை- நாவுலயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவையில் யோசனையொன்றை சமர்ப்பிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பல்கலைக்கழகங்கள் குறித்த புதிய அறிக்கை தயாரிப்பு-சுனில்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்கள் தொடர்பான புதிய அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோப் குழுவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்துள்ளார். அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பொதுவான பிரச்சினைகளே காணப்படுவதாகவும் அவற்றிற்குத் தீர்வு காணப்பது மிக அவசியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழகத்திற்கான நிதி, வெளிநாட்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில், பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள், மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி உள்ளிட்ட காரணிகள் தொடர்பான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டியுள்ளார். இதுதொடர்பான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரபல ஹெரோயின் வர்த்தகர் 'ஒலு மரா' உட்பட 11 பேர் கைது

பிரபல ஹெரோயின் வர்த்தகரான "ஒலு மரா" எனப்படும் சானுக மதுஷான் உள்ளிட்ட 11 பேர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ- சிறிகம்பல பகுதியில் வைத்தே சந்தேகநபர்கள் 11 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களைக் கைது செய்யும் போது சந்தேகநபர்களிடமிருந்து ஒரு தொகை ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)


# கண்ணீர் அஞ்சலி



## கிருஷ்ணபிள்ளை-கந்தசாமி

[ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்]

(முன்னாள் இணைப்பாளர், புனர்வாழ்வு அமைச்சு, உப செயலாளர், நல்லூர் பிரதேச மூத்தோர் அவை)

எமது நல்லூர் மூத்தோர் அவையின் உப செயலாளர் கிருஷ்ணபிள்ளை- கந்தசாமி அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் கொண்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொண்டு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

நிர்வாகக் குழு, நல்லூர் பிரதேச மூத்தோர் அவை. (7477)

# வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னனி நிறுவனங்களில் ஒன்றான

**TEA STAR INTERNATIONAL (PVT) LTD.**

நிறுவனத்தின் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான

**"SALES PROMOTION OFFICERS"**

(ஆண் / பெண்) தேவை

**தகமைகள்**

- G.C.E. (A/L) (விஞ்ஞானப் பிரிவு முன்னுரிமை)
- வயது எல்லை : 18-25
- முன்அனுபவம் விற்பனை துறையில் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு : 0779628999

(க-5450)

# நன்றி தெரிவிப்பு

2018/2019 ஆண்டுக்கான உருளைக்கிழங்கு உற்பத்தியாளருக்கு 50 % மானிய அடிப்படையில் விதை கிழங்கு 1400 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அறுவடையின் போது நியாயமான விலை கிடைக்க 50 % இறக்குமதி வரியை அதிகரிக்கச் செய்த முன்னாள் பிரதி விவசாய அமைச்சர் திரு. அங்கஜன் இராமநாதன் மற்றும் அரசாங்க அதிபர் அவர்களுக்கும் விவசாயிகளின் நன்றி தெரிவிப்பு.

யாழ்.மாவட்டத்தில் 2018/2019 கால பெரும்போகத்தில் 3500 அந்தர் விதை கிழங்கு 50% மானியத்தில் 1400 விவசாயிகளுக்கு கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

தற்போது அறுவடை தொடங்கிய நிலையில் இறக்குமதி செய்யப்படும் கிழங்கிற்கு 50% வரி அதிகரிப்பால் நியாயமான விலை கிடைக்கின்றது. உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திச் செலவிலும் பார்க்க கூடுதலான விலை கிடைக்க வாய்ப்புண்டு. எனவே வரி அதிகரிக்க நடவடிக்கை எடுத்த முன்னாள் பிரதி விவசாய அமைச்சர் திரு.அங்கஜன் இராமநாதன் மற்றும் அரசாங்க அதிபர் அவர்களுக்கும் விவசாயிகள் சார்பாக நன்றிகள்.

எதிர்வரும் காலங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புண்டு. (7476)

மாவட்ட கமக்கார அமைப்பு அதிகார சபை.

# பாரதம்

## ராஜீவ் கொலை வழக்கு

# முருகன் 9வது நாளாகவும் தொடர் உண்ணாவிரதம்





(வேலூர்)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன் நேற்று 9வது நாளாகவும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன் வேலூர் மத்திய சிறையிலும், அவருடைய மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

முருகன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அரசின் சிபார்சு குறித்து நடவடிக்கை எடுக்காமல் ஆளுநர் காலம் கடத்தி வருகின்றார்.

இது தொடர்பாக முருகன் கடந்த 31 ஆம் திகதி வேலூர் மத்தியசிறை அதிகாரிகள் மூலம் ஆளுநருக்கு கோரிக்கை மனு ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அதில், 'ராஜீவ் காந்தி கொலைக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை. வேண்டுமென்றால் உண்மை கண்டறியும் சோதனை நடத்துங்கள். அல்லது கருணை கொலை செய்யுங்கள். இல்லையென்றால் உண்ணாவிரதம் இருந்து சாகவிடுங்கள்' எனக் கூறியுள்ளார்.

அத்துடன், அவர் கடந்த 2 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தநிலையில் முருகனிடம் சிறைத்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# அமெரிக்கர்களைப் போலவே ஐரோப்பியர்களையும் நம்பாதீர்கள்

## எச்சரிக்கும் ஈரான்



(தெக்ரான்)

அமெரிக்கர்களை போல ஐரோப்பியர்களையும் நம்ப வேண்டாம் என்று ஈரான் சிரேஷ்ட மத தலைவர் காமெனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமெனி அந்நாட்டில் நடந்த அரசு விழா ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் உரையாற்றியதாவது, "அமெரிக்காவுக்கு மரணம்தான் அதாவது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பாதுகாப்பு அமைச்சர் மைக் போம்பியோ, பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டனை போன்ற அதிகாரமிக்கவர்களை குறிக்கிறது.

அமெரிக்கர்களை போல் நாம் ஐரோப்பியர்களையும் நம்பக் கூடாது. நாங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கூறவில்லை. இருப்பினும் அவர்களிடம் நம்பகத்தன்மை இல்லை" என அவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார்.

இந்த நிலையில் ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன.

ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா மிரட்டல் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (7)

# ஜமால் கஷோக்கியை கொல்ல இளவரசர் உத்தரவிடவில்லை



(ரியாத்)

ஜமாலைக் கொல்ல சவுதி இளவரசர் உத்தரவிடவில்லை என்று மீண்டும் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சவுதி வெளியுறவுத் துறை அமைச்சர் அடெல் அல் உரையாற்றுகையில், "சவுதி இளவரசர் முகமது சல்மான் பத்திரிகையாளர் ஜமாலைக் கொல்ல உத்தரவிடவில்லை.

மேலும் 2017 ஆம் ஆண்டிலேயே ஜமாலைக் கொல்ல இளவரசர் திட்டமிட்டார் என்ற செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன. இதுபற்றி நான் கருத்து தெரிவிக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

சவுதி பத்திரிகையாளர் ஜமால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திய ஐக்கிய நாடுகள் சபை தனது முதல் அறிக்கையை கடந்த வீரம் வெளியிட்டது.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில், "சவுதி அரேபியாவின் அதிகாரிகள் திட்டமிட்டு மிருகத்தனமாக ஜமாலைக் கொலை செய்துள்ளனர். மேலும் சவுதி, துருக்கி அரசு இந்தக் கொலை குற்றத்தை விசாரிக்க அனுமதி அளிக்காமல் 13 நாட்கள் தாமதப் படுத்தியுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் ஜமால் கஷோக்கி கொல்லப்படுவதற்கு முன்னரே சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# அடுக்கு மாடி இ...

# பலி எண்ணிக்கை 2...



(இஸ்தான்புல்)

**துருக்கியின் இஸ்தான்புல் நகரில் ஏ... இடிந்து விழுந்த விபத்தில் பலியானோர் ... ஆக அதிகரித்துள்ளது என மீட்புக்குழுவின...**

துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரின் கர்தால் மாவட்டத்தில் ஏழு மாடிக் கட்டடம் அமைந்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த அடுக்குமாடி கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் 3 பேர் பலியானதாக முதல் கட்டத் தகவல்கள் தெரிவித்தன. இதற்கிடையே, மேலும் 12 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டது என ...

# வெனிசுவெலாவில் உ...

# 14 சிறுவர்கள்...

(கராகஸ்)

மனிதாபிமான உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளமையினால் வெனிசுவெலாவில் 14 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெனிசுவெலாவிற்கு சர்வதேசத்தின் உதவி தேவையில்லை எனத் தெரிவித்து, அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ எல்லைகளை மூடியுள்ளார்.

இந்நிலையில் பட்டினியால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் 14 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக



பார்சிலோனாவிலுள்ள வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோய்த்தாக்கங்களுக்குட்பட்டுள்ள ...

# கால்பந்து கழக பயி...

# பத்துப்பேர் பரிதாப...

(ரியோ டி ஜெனிரோ)

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள கால்பந்து கழகப் பயிற்சி மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் பிளமிங்கோ கால்பந்து கழகம் செயற்பட்டு வருகிறது. இங்குள்ள பயிற்சி மையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை சிலர் பயிற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது, கால்பந்து பயிற்சி மையத்தில் திடீரென தீ பற்றியது. இது ...

# வெளிநாடு

## இடிந்து விபத்து

## கை 25 ஆக உயர்வு



### ரில் ஏழு மாடி கட்டடம்

### னோர் எண்ணிக்கை 15

### குழுவினர் தெரிவித்தனர்.

என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, மீட்புக்குழு அதிகாரிகள் தெரிவிக்கையில், கட்டடம் இடிந்து விழுந்ததில் இதுவரை 15 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று ஐந்து வயது சிறுமி பத்திரமாக மீட்கப்பட்டார். சம்பவ இடத்தில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவித்தனர்.

விசாரணையில், கட்டடத்தின் 3 மாடிகள் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டது தெரியவந்தது.

இதுகுறித்து உள்ளூர் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (4-7)

## ல் உதவிகள் நிறுத்தம்

## ள் உயிரிழப்பு



மக்களுக்கான மருந்துகளை வழங்குவதிலும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே, வெனிசுவெலா மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளதாக தொண்டர் படை தெரிவித்துள்ளது.

கொலம்பியாவின் குகடா எல்லைப் பகுதியில், உதவிப் பொருட்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், நிக்கோலஸ் மதுரோவின் கொள்கையினால் அமெரிக்கா, கொலம்பியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து உதவிப் பொருட்களை ஏற்றிச்சென்ற லொரிகள் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளன. (7)

## யிற்சி மையத்தில் தீ

## பமாக உயிரிழப்பு

அனைத்து இடங்களுக்கும் பரவியது.

இந்த தீ விபத்தில் சிக்கி சுமார் 10 பேர் பரிதாபமாகப் பலியாகினர். மேலும் சிலர் படுகாயம் அடைந்தனர். தீ விபத்தில் கழகத்தின் ஒரு பகுதி முழுவதும் சேதமானது.

தகவலறிந்து தீயணைப்பு வண்டிகள் அங்கு விரைந்து சென்றன. தீயை போராடி அணைத்தனர். காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். (4-7)

# வெனிசுவெலா எல்லையை மூடிய ஜனாதிபதி

# வெளிநாட்டு உதவி கிடைக்காமல் மக்கள் அவதி

(கராகஸ்)

வெளிநாட்டு உதவிகளை ஏற்க மறுக்கும் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ வெனிசுவெலா எல்லைப் பகுதிகளை மூடிவிட்டார். உதவி பொருட்கள் கிடைக்கும் என மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்த வெனிசுவெலா மக்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வெனிசுவெலாவில் கடுமையான பொருளாதார நெருக்கடி நீடிப்பதால் அத்தியாவசியப் பொருட்களைக் கூட வாங்க முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

இதற்கிடையே எதிர்க் கட்சித் தலைவர் ஜுவான் கெய்டோ தன்னை நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டதால் அரசியல் குழப்பம் நீடிக்கிறது.

அவருக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்ததால் அந்த நாடுகளுடன் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மோதல் போக்கைக் கையாண்டு வருகிறார்.

இதற்கிடையில் ஜுவான் கெய்டோ கேட்டுக்கொண்ட தன் பேரில் அமெரிக்கா போன்ற நாடுகள் வெனிசுவெலா மக்களுக்குத் தேவையான உதவிப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளன.

ஆனால் வெளிநாட்டு உதவிகளை ஏற்க மறுக்கும் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ வெனிசுவெலா எல்லைப் பகுதிகளை மூடிவிட்டார். இதனால் அமெரிக்கா, கொலம்பியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து உதவிப் பொருட்களை ஏற்றி வந்த லொரிகள் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளன.

உதவிப் பொருட்கள் கிடைக்கும் என மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்த வெனிசுவெலா மக்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ-7)


# கனடா மசூதியில் துப்பாக்கி சூடு; வாலிபருக்கு ஆயுள் சிறை

## 40 ஆண்டுகளுக்கு பரோல் இல்லை

(கியூபெக் சிட்டி)

கனடாவில் கடந்த 2017 ஆம் ஆண்டு மசூதியில் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தி 6 பேரைக் கொன்ற வாலிபருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் கியூபெக் சிட்டியில் உள்ள மசூதியில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி மாலை தொழுகை நடைபெற்ற போது, ஒரு வாலிபர் துப்பாக்கியுடன் நுழைந்து, சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டார்.



இதில், தொழுகையில் ஈடுபட்டிருந்த 6 பேர் உயிரிழந்தனர். 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய வாலிபரைப் பொலிஸார் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் அலெக்சாண்டர் பிசோனெட் என்பது தெரியவந்தது.

அவர் மீது கியூபெக் சிட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையின் முடிவில் அலெக்சாண்டர் பிசோனெட் (வயது-29) மீதான குற்றம் நிரூபணமானது.

இதையடுத்து அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

அத்துடன் 40 ஆண்டுகள் வரை பரோல் பெற முடியாது என்றும் உத்தரவிட்டார். (4-7)

# அமெரிக்காவில் நீண்ட காலம் எம்.பியாக பணியாற்றிய ஜான் டிங்கெல் மறைவு-ட்ரம்ப் இரங்கல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நீண்ட காலம் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த ஜான் டிங்கெல் காலமானார். அவரது மறைவுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் இரங்கல் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்தவர் ஜான் டிங்கெல். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இவர் முதன் முதலில் 1955 ஆம் ஆண்டு பிரதிநிதிகள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின்னர் தொடர்ந்து 59 ஆண்டுகள் எம்.பியாகப் பணியாற்றினார்.

குறிப்பிடத்தக்க சுகாதார திட்டங்கள் மற்றும் பல முக்கிய தாராளவாதச் சட்டங்கள் கொண்டு வருவதற்கு உந்துசக்தியாக இருந்தார்.

2015 ஆம் ஆண்டு பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெற்றார். அதன்பிறகும், முக்கிய விவகாரங்கள் தொடர்பாக தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

இந்நிலையில், வயது முதுமை சார்ந்த உடல்நலக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டிருந்த ஜான் டிங்கெல் (வயது-92), நேற்று முன்தினம் காலமானார். மிச்சிகனின் டியர்பார்ன் நகரில் உள்ள அவரது வீட்டில் உயிர் பிரிந்தது.

அவரது மறைவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் வெள்ளை மாளிகை மற்றும் அனைத்து அரசுத் துறை கட்டடங்கள், இராணுவ கட்டடங்களில் தேசியக் கொடியை அரைக்கம்பத்திற்குப் பறக்க விடும்படி ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார். பாராளுமன்றத்தில் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (7)

# சர்வதேச நாணய நிதியத்தின் பிடிக்குள் இலங்கையின் வரவு-செலவுத் திட்டம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிடிக்குள் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் காணப்படுவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, வரவு-செலவுத் திட்டத்தை கூட பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாத நெருக்கடிக்குள் அரசாங்கம் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி-மகிந்த கூட்டணி பேச்சு சிறப்பாக இடம்பெறுகிறது

## திலங்க சுமதிபால சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர், இரு வாரத்திற்கு ஒருமுறை விசேட சந்திப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய இரண்டையும் இணைத்து ஒரு கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் விவாதிப்பதற்காகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

மேலும் இரு கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் சிறப்பாக இடம்பெற்றுவருவதாகவும் பிற கட்சிகளுடன் ஒரு கூட்டணியை எவ்வாறு உருவாக்க முடியும் என பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இருப்பினும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு சென்றுள்ளார். அவர் அடுத்த வெள்ளிக்கிழமையே மீண்டும் நாடு திரும்பவுள்ள நிலையில் அதுவரை, கட்சித் தலைவர்களுக்கிடையில் எந்தச் சந்திப்பும் இடம்பெறாது என திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்ரீ.ல.சு.க. மற்றும் பொதுஜன பெரமுன பிற அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அந்தவகையில் வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, திஸ்ஸ விதாரண, டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இரு கட்சிகளும் எந்தவொரு உடன்படிக்கைக்கும் வரவில்லை எனவும் இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவம்சம் தெரிவித்தார்.

மேலும், முதலில் தாம் ஒரு உடன்படிக்கைக்கு வர வேண்டும் என்றும் பிற அரசியல் கட்சிகள் எவை என்பதை முடிவு செய்ய வேண்டும் என்றும் அதன் பின்னர், கூட்டணியின் அரசியலமைப்பு பற்றிச் சிந்திக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நூறு கோடி கோரும் றிசாத் பதியுதீன்

(கொழும்பு)

மக்கள் மத்தியில் தனக்குள்ள செல்வாக்கு, கீர்த்தி என்பவற்றை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் நோக்கில் ஆதாரமின்றி இட்டுக்கட்டப்பட்ட செய்தியை ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்த, தொழில்சார் தகவல் தொழில்நுட்ப அமைப்பின் செயலாளர் லசந்த விக்கிரம சிங்கவிடமிருந்து ரூபா நூறு கோடி மானநட்ட ஈடாக வழங்குமாறு தனது சட்டத்தரணியூடாக அமைச்சர் றிசாத் பதியுதீன் கோரியுள்ளார்.



வியட்நாமிலிருந்து மிளகை இறக்குமதி செய்து, வேறு வகையில் பொதியிட்டு அவற்றை இந்தியா உட்பட வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதிக்கும் வகையில் அமைச்சரும், அவரது சகோதரரும் நடந்து கொள்வதாக லசந்த விக்கிரமசிங்க வெளியிட்ட அபாண்டமான பிரசாரத்துக்கு எதிராகவே, அமைச்சர் றிசாத் இத்தொகையை மான நட்டஈடாகக் கோரியுள்ளார்.

அவரது சட்டத்தரணி சந்தீப கமதிகே ஊடாக அமைச்சர் அனுப்பியுள்ள மானநட்டஈட்டுக் கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களின் பிரதிநிதியான அமைச்சர் றிசாத்தைதையும் அவரது கட்சியையும் பாதிக்கும் வகையில் பொறுப்பின்றிச் செயற்பட்ட, லசந்த விக்கிரமசிங்கவின் நடத்தையால் அமைச்சரின் மவுசும் கௌரவமும் பாழ்படுத்தப்பட்டுள்ளதாகவே அமைச்சர் கருதுகிறார்.

அரசின் முக்கியமான அமைச்சர் பற்றி எவ்வித ஆதாரங்களுமின்றி செய்தி வெளியிட்டுள்ள இவரின் பொறுப்பற்ற நடத்தை எந்த நோக்கை அடிப்படையாகக் கொண்டவை என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சருக்கும் தனது சகோதரருக்கும் இவ்விடயங்களில் எவ்வித தொடர்புகளும் இல்லை. எனவே 14 நாட்களுக்குள் அமைச்சர் கோரிய நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைக்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் தயாராகவுள்ளதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## மரணத்தின் மறு பக்கம்

மனித வாழ்க்கை என்பது மரணத்துடன் முடிந்து போகும் ஒன்று என்று தான் பலபேர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மரணம் என்பது என்ன? மூச்சும் இதயத் துடிப்பும் நின்று போவது தான் மரணம். இது இரண்டும் நின்று போனதற்குப் பின் என்ன நடக்கின்றது தெரியுமா? உயிர் வெளியே போகின்றது! இந்த நேரத்தில் அனுபவம் எப்படியிருக்கும்? இதைப் பற்றியெல்லாம் சில ஆராய்ச்சிகள் ஏற்கனவே நடந்திருக்கின்றது. இன்னமும் நடந்து கொண்டிருக்கின்றது! இறக்கும் அனுபவத்தைப் பற்றி எப்படி ஆராய்ச்சி செய்வது என்று யோசிக்கிறீர்களா?

இந்த உலகத்திலே தினமும் எத்தனையோ விபத்துக்கள் நடக்கின்றது! அதிலே இறப்பினுடைய விளிம்புவரை போய் திரும்ப பிழைக்கின்றவர்களும் உண்டு. செத்துப்பிழைப்பவர்களும் உண்டு! இவர்களையெல்லாம் சோதனை செய்து தான் இந்த ஆராய்ச்சியை நடத்துகின்றார்கள்! அப்படி இறந்து பிழைத்த சிலபேருடைய அனுபவம் எப்படி இருந்ததாம் தெரியுமா? அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்... ஒரு இருண்ட பாதை ... அந்த இருட்டு வெளியில் சொல்ல முடியாத வேகத்தில் தள்ளப்பட்டது மாதிரி இருந்ததாம்! அதற்குப் பின் அவர்கள் உடம்பை விட்டு தனியே இருக்கிறது மாதிரி உணர்ந்தார்களாம். அவர்கள் உடம்பை அவர்களே ஒரு அந்நிய மனிதன் மாதிரி பார்க்க முடிந்தது என்று சொல்கிறார்கள்! ஒரு பெரிய கார் விபத்து ... அதிலே செத்துப்பிழைத்த ஒருவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

நாங்கள் காரில் போய்க் கொண்டு இருந்தோம் . குறுக்கே வந்த கார் எங்கள் கார் மேல் திடீர் என்று மோதிக் கொண்டது. அவ்வளவு தான் ... நான் இருட்டில் எங்கேயோ போவது மாதிரி இருந்தது! பிறகு திடீர் என்று ஒரு ஐந்து அடி உயரத்திலே நான் காற்றிலே மிதக்கின்ற மாதிரி இருந்தது... என் காரை என்னால் பார்க்க முடிந்தது! காரைச் சுற்றிக் கூட்டம் கூடியது. என்னுடைய காரில் வந்த சிநேகிதன் அதிர்ச்சியோட காரினுடைய இடிபாடுகள்லேயிருந்து வெளியே வருகின்றான்.

என்னுடைய உடம்பு உள்ளே சிக்கிக் கொண்டு இருக்கின்றது! இவ்வளவையும் என்னால் தெளிவாகப் பார்க்க முடிந்தது! இப்படி சொல்கிறார் அவர்.

இன்னொரு பெண்! அதற்குத் திடீர் என்று ஒரு நாள் மாரடைப்பு வந்து இறந்து போய்விட்டேன்! அதற்குப் பிறகு அதிர்ஷ்ட வசமாக தப்பிக் கொண்டேன்.

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? என்னுடைய மூச்சும் இருதயமும் நின்று போய்விட்டது! தாதியர்கள் வைத்தியர்களை அவசரமாகக் கூப்பிடுகின்றார்கள். எனக்குக் கேக்கின்றது! நான் என் உடம்பை விட்டு நழுவி வெளியே வந்து காற்றிலே வெறும் காகிதத்தைப் போல மிதக்கின்றேன்! வைத்தியர்களும் தாதிகளும் எனக்குச் சுவாசம் வரவழைக்க முயற்சி செய்கின்றார்கள்!

பெரிய இயந்திரம் ஒன்றைக் கொண்டு வந்து என் உடம்புக்கு மின் அதிர்ச்சி கொடுகின்றார்கள்! அதனாலே என் உடம்பு அதிர்வதைக் கூத் தெளிவாகப் பார்த்தேன்! அப்படி என்கிறார் அந்தப் பெண்.

உடம்பை விட்டு வெளியே வருபவர்கள் அனுபவம் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் இருக்கு! அவர்கள் சொல்லும் வர்ணனை பலவிதமாக இருந்தாலும் ஒரு விடயத்தை மட்டும் எல்லோரும் உறுதியாகச் சொல்கின்றார்கள். என்ன தெரியுமா?

அதாவது உடம்பை விட்டு வெளியே வந்த பிறகு வலி இல்லை வேதனை இல்லை என்கின்றார்கள்!

சுகமான வெது வெதுப்பான நீரில் மிதக்கின்றது மாதிரி இருந்தது என்கிறார்கள். இன்றைக்கு விஞ்ஞானிகள் சொல்கின்ற விடயத்தை இளங்கோவடிகள் அன்றைக்கே சொல்லியிருக்கின்றார்.

கோவலனை விசாரணைகள் ஏதும் இல்லாமலே கொன்று விடுகின்றார்கள்! கண்ணகிக்குச் செய்தி கிடைக்கின்றது! கதறிக் கொண்டே ஓடிப் போய் பார்க்கும் போது கோவலன் உடம்பு இரண்டு துண்டாகக் கிடக்கின்றது... வெட்டிப் போட்டிருக்கின்றார்கள்.

அப்பொழுது தான் அந்த அதிசயம் நடக்கின்றது! என்ன தெரியுமா?

இறந்து போன கோவலன் எழுந்து நிற்கின்றான். கண்ணகியைப் பார்க்கின்றான். முழுநிலவு மாதிரி இருக்கின்ற உன் முகம் வாடிப் போய்விட்டதே என்று கவலைப்படுகின்றான். அவளுடைய கண்ணீரைத் துடைக்கிறான். அதற்குப்பிறகு அவன் வெட்டுப்பட்ட ஸ்தூல உடலைவிட்டு முழுமையான பழுதில்லாத ஆவி உடலாக மாறி தேவர்கள் சூழ வானுலகம் போய்விடுகின்றான்.

'பழுது ஒழிந்து எழுந்தான்!' என்று இளங்கோவடிகள் சொல்கின்றார். திருவள்ளுவர், கம்பர் எல்லாம் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்... அது மட்டுமில்லை... நம்ம நாட்டில் பழைய கோட்பாடுகள் எல்லாம் சொல்கிறது... பௌத்த சமயம் ஜைன சமயம் இது எல்லாம் கூட சொல்லுகின்றது!

ஆன்மா அழியாதது என்று சொல்கின்றது! மரணத்தின் பின் மனிதனின் நிலை அப்படி என்று மறைமலை அடிகள் ஒரு புத்தகமே எழுதியிருக்கின்றார்.

பொதுவாகச் செத்துப் பிழைக்கின்றவர்கள் எல்லோரும் ஒரு அதிசய விடயத்தைப் பற்றி சொல்கிறார்கள்! அதாவது ஜோதி ரூபமாக அவர்கள் ஒரு பொருளைக் கண்டதாகச் சொல்கிறார்கள்! மிகவும் பிரகாசமாக இருக்கின்றதாம். இருந்தாலும் கண்கள் கூசவில்லையாம்! அந்த வெளிச்சத்தைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகளே இல்லையாம்!

இதைத்தான் நமது இராமலிங்க அடிகள் அருட்பெரும் சோதி என்று சொன்னார். இன்னொரு விடயம். அந்த வெளிச்சம் அவர்களுடன் பேசியதாக வேறு சொல்கிறார்கள்... வெளிச்சம் எப்படி பேசும் என்கிறீர்களா? வார்த்தையோ குரலோ கேட்கலையாம்! ஆனாலும் அது சொல்வது புரிகின்றதாம்.

இதுவரைக்கும் நான் சொன்னது எல்லாம் நானாகச் சொன்னது இல்லை! விஞ்ஞானிகளும் மெய்ஞானிகளும் சொன்னது.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

167



இவரும் தனது மத உரைகளிலும் பிரசங்கங்களிலும் கிறிஸ்தவ மிஷனரிமாரின் மதப்பரப்பலைத் தாக்கியதுடன் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களைத் தொடர்ந்து கண்டனம் செய்தார்.

இவர் உணர்வின் அடிப்படையில் மரபுவழிக் கட்டமைப்பின் கொடுமுடியில் சைவத்திற்கு இடம் தந்து சைவ சமயத்தையிட்டு மக்களுக்கு மேலும் துலாம்பரமாகவும் தெளிவாகவும் விளக்கமளித்தார். பின்வரும் கூற்றில் இவர் இதை விளக்குகின்றார்.

இன்னும் இவ்வுலகத்தில் மானுடர் ஒவ்வோர் தொடர்ச்சி பற்றிச் செய்து போற்றும் அபிமானங்கள், சாதியபிமானம், தேசாபிமானம் எனப் பல வகைப்படும். அவற்றில் சாதியபிமானத்தை நோக்கத் தேசாபிமானம் உயர்ந்தது.

தேசாபிமானத்தை நோக்கப் பாசாபிமானம் உயர்ந்தது. சாதியபிமானம், தேசாபிமானம், பாசாபிமானங்கள் உயிருக்குப் புறம்பாயுள்ள ஒவ்வோர் பொருள் பற்றி உயிர்களிடத்து விளங்கும் ஞானமாகும்.

ஆதலில் மனிதர் மற்றைய அபிமானங்களிலும் சமயாபிமானத்தையே அதிக சிரத்தையோடு பெரிதும் போற்றி ஒழுகுதல் வேண்டும்.

சமயவுணர்வுக்கு சபாபதி நாவலர் அதியுயர்ந்த இடத்தை அளிப்பதோடு நிற்காமல் ஏனையவற்றினின்றும் அதற்குத் தனியிடம் தருகின்றார்.

மற்றொரு தளத்தில் பார்க்கையில் ஏனையவற்றில் காணப்படாத ஒருவகை உள்ளார்ந்த அல்லது சமயம் சார்ந்த முக்கியத்துவம் இதற்கு உண்டு.

இக் காரணத்திற்காக அதை இவர் அதியுயர்ந்ததாகவும் அதி ஏற்புடையதாகவும் கருதுகின் றார்.

இந்த வகைப்படுத்தலுடன் நாம் உடன்படுகின்றோமா இல்லையா? என்பது இங்கு முக்கியமல்ல.

அவர் குறிப்பாக இந்த உணர்வு என்ற விடயத்தை, சாதாரண தமிழரின் அக (மத ரீதியிலானது), புற ( உலக ரீதியானது) வாழ்வில் அது வகிக்கும் அதிமுக்கியத்துவத்தை அடையாளங் காட்டுகின்றார் என்பதே இங்கு முக்கியமாகும்.

**"செந்திநாத ஐயரும் (1848-1924) இவரைப் போன்றே முனைப்புடன் ஈடுபட்டவராவார். முதலில் நாவலருக்கு உதவும் சிறுபாத்திரத்தை வகித்த இவர், பின்னர் கிறிஸ்தவருக்கு எதிராக மிகவும் முனைப்புடனும் தீவிரமாகவும் சைவத்தை ஆதரித்தார். நாவலரும் சபாபதி நாவலரும் இவருக்கு முன் செய்தததைப் போன்றே இவரும் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் சைவ மேம்பாட்டுக்காக உழைத்தவர்"**

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இதற்கும் மேல் அவர் தமிழரை இந்த வகையில் சிந்திக்க வெளிப்படையாய் ஊக்கமளித்து நாம் குறிப்பிடும் தமிழுணர்வைத் தூண்டியிருப்பார் என்பது நிதர்சனமாகும். செந்திநாத ஐயரும் (1848-1924) இவரைப் போன்றே முனைப்புடன் ஈடுபட்டவராவார்.

முதலில் நாவலருக்கு உதவும் சிறுபாத்திரத்தை வகித்த இவர், பின்னர் கிறிஸ்தவருக்கு எதிராக மிகவும் முனைப்புடனும் தீவிரமாகவும் சைவத்தை ஆதரித்தார்.

நாவலரும் சபாபதி நாவலரும் இவருக்கு முன் செய்தததைப் போன்றே இவரும் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் சைவ மேம்பாட்டுக்காக உழைத்தவர்.

கிறிஸ் தவத்திற்கு எதிரான இவரது உரைகள் அளித்த பெரும் தாக்கத்தின் பயனாக இவருக்கு கிறிஸ்தவமத கண்டன கோளரி என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர், உடுவில் சங்கர சுப்பையர் என்பவர்களும் நாவலரைப் பின்பற்றி சமயப் பிரசங்கம் நிகழ்த்தும் பாரம்பரியத்தைத் தொடர்ந்த போதும் சைவத்தை விரிவாக்கம். செய்வதற்காக அதை வலுப்படுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தினர்.

புராண உரைகளும் சைவத்துடன் தொடர்புடைய ஏனைய சொற்பொழிவுகளும் இக்காலத்தில் நிகழ்த்தப்பட்டு அவை சைவத்தை மேலதிக விசுவாசத்துடனும் விளக்கத்துடனும் அனுஷ்டிக்கப் பொதுமக்களை ஊக்குவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

கிறிஸ்தவ எதிர்ப்புப் பிரசாரம் ஒருபுறமும் புராண இலக்கியங்களைக் கோவில்களில் போதித்தல் மறுபுறமும் மேற்கொள்ளப்பட்டன. இது நாவலரின் எண்ணங்களிலும் இலக்குகளிலும் பொது மக்களுக்கு இவ்வழியில் அறிவூட்டுவது என்பதாகும்.

எல்லா நிலையிலுமுள்ள மக்களும் இவற்றில் ஆர்வத்துடனும் முனைப்புடனும் பங்கு பற்றினர் என்பதற்குச் சான்றுண்டு.

நாவலரின் சீடர்களில் ஒருவரான அவரது மருமகனும் மாணவனுமாகிய பொன்னம்பலப்பிள்ளை (1830-1902) ஒரு பிரசங்கி என்ற வகையில் நாவலரை உதாரணமாகக் கொண்டவர். இவர் எண்ணற்ற உரைகளை வழங்கினார்.

அவரின் பேச்சு வன்மைக்காகவும் கவர்ச்சிக்காகவும் மக்கள் பெருந்தொகையில் கூடினர்.

நாவலரின் பாரம்பரியத்தைப் பின் தொடர்ந்த இன்னுமொருவரான பண்டிதர் கணபதிப்பிள்ளை பொன்னம்பலப் பிள்ளையை பின்வருமாறு புகழ்கின்றார்.

உச்சியில் இருந்து உள்ளங்கால் பரியந்தம், உள்ளங்காலில் இருந்து உச்சிபரியந்தம் பொன்னம்பலப்பிள்ளையின் உருவமே இலக்கிய ரசனையால் ஆனது. தனிக்கற்கண்டிற் செய்த பலகாரம் போல இலக்கிய ரசனை மயமாகவிருந்தார் பொன்னம்பலப்பிள்ளை.

பொன்னம்பலப்பிள்ளை சமயச் சொற்பொழிவுகளை மட்டும் ஆற்றவில்லை. அவர் தலைசிறந்த தமிழ் இலக்கியங்களான இராமாயணம், சீவகசிந்தாமணி என்பவற்றைப் பற்றியும் பேசினார். இது மக்களைப் பெருமளவில் கவர்ந்தது.

(தொடரும்)

# தேவைப்படின் தேசிய அரசு

# கழிவுப் பொருள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் நிலவும் கழிவுப் பொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் முக்கிய இடம் வகிக்க முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேவைப்படும் பட்சத்தில் மீண்டும் தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி தயாராக இருப்பதாகவும் அதற்காக ஏனைய கட்சிகளும் ஒன்றிணைய முடியும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

தூய்மையான நகரம் - சுற்றாடலுக்குப் பொருத்தமான நாடு என்ற தொனிப் பொருளின் கீழ், கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வழங்கும் நிகழ்வில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வு காலியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்த பின்னர் மத்திய அரசாங்கத்தால் இதற்காக ஆகக்கூடிய ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நாடு முழுவதிலும் நிலவும் கழிவுப் பொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 2015ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கம் பல சவால்களுக்கு மத்தியில் பொதுமக்களுக்குப் பாரிய சேவையை மேற்கொண்டது.



விசேடமாக தேசிய அரசாங்கம் மூலம் கிராம மட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் நிலவிய அரசியல் குரோதத்தை தீர்க்க முடிந்ததாகவும் பிரதமர் தெரிவித்தார். நாட்டில் நிலவிய பெரும் கடன் சுமையைத் தீர்ப்பதற்கு தற்போது ஸ்திரமான நிலைப்பாடு முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்காக 92 வாகனங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதற்காக 72 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி மாவட்ட செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் புதிய உடற்பயிற்சி மத்திய நிலையமொன்றும் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர்களான வஜிர அபேவர்தன, கயந்த கருணாதிலக உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# ஒவ்வொரு தொகுதிக்கும் தேசிய பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து

(களுதாவளை)



நாங்கள் மறுபிறவி எடுத்து புத்துயிர்வு பெற்றுத்தான் இந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அமைத்திருக்கின்றோம். இதனை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவை வழங்கியிருக்கின்றது.

இந்த ஆதரவானது தமிழ் மக்களின் தீர்வுக்காவும் எமது மண்ணை அடைய வேண்டும் என்பதற்காக மாத்திரமே இதனை மேற்கொண்டுள்ளனர் என கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தெரிவித் தார்.

களுதாவளை மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

தேசிய பாடசாலைகளில் தங்களது பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை பெற்றோர் தற்போது கூடுதலாக காட்டி வருகின்றனர். இது தொடர்பாக அமைச்சுக்கு வருபவர்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. எனவே ஒவ்வொரு தொகுதிக்கும் தேசிய பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். நகரத்திற்கு உட்பட்ட பாடசாலைகளே வளர்ச்சியடைகின்றது.

யுத்தகாலத்தில் சிறந்த நிர்வாகத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் சிறந்து விளங்கியது. ஆனால் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் கடந்த அரசாங்கம் அதனை தடைசெய்யும் நோக்குடன் திட்டமிட்டு இம்மாகாணங்களுக்கு போதைவஸ்துக்களை அனுப்பியுள்ளனர். இதனால் மாணவர்கள் அதற்கு அடிமையான நிலை கடந்த காலங்களிலே ஏற்பட்டு இருந்தது.

இன்று நாங்கள் அந்த அரசாங்கத்தை மாற்றி ஒரு நல்லாட்சி அரசாங்கத்தை உரு வாக்கியிருக்கின்றோம். நாங்கள் இந்த நல்லாட்சி அரசாங்த்தை மாற்றியபிற்பாடு இந்த நிலையை சற்று மாற்றியமைத்திருக்கின்றோம்

கடந்தகால அரசாங்கத்தில் எமது பிரதேச பாடசாலைகள் புறந்தள்ளப்பட்டுள்ளன. பல பாடசாலைகள் தற்போது வளப்பற்றாக்குறையுடன் தான் இயங்கிக்கொண்டு வருகின்றன.

நாங்கள் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை அமைத்திருக்கின்றோம். அதற்காக பல கட்சிகள் எமக்கு ஆதரவு தந்தன. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு- கிழக்கு ரீதியாக எமது அரசாங்கத்திற்கு பூரண ஆதரவு வழங்கியிருக்கின்றது. இந்த ஆதரவானது தமிழ் மக்களின் தீர்வுக்காக மாத்திரமே.

வேறு எந்தவொரு நோக்கத்திற்காகவும் இதனை அவர்கள் செய்யவில்லை. எமது மண்ணை அவர்கள் அடைய வேண்டும் என்பதற்காகவே இதனை மேற் கொண் டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 13 ஆவது திருத்தத்திற்கு அமைய கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(காத்தான்குடி)

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக கிழக்கு மாகாண மக்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுமென ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கிழக்கு மாகாணத்தை கல்வியிலும் சுகாதாரத் துறையிலும் முன்னேற்றுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு எனக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நான் பல தீர்மானங்களை எடுத்துள்ளேன். அந்தவகையில், ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுக்கும் அதிகாரங்களை வழங்கி, பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரங்களை வழங்கி ஒவ்வொரு பிரதேசத்தினுடைய கல்வித் திட்டங்களை அவர்களுக்கு நாம் ஒப்படைக்கவுள்ளோம்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தினுடைய ஒவ்வொரு பிரச்சினையையும் அடையாளங்கண்டு அந்தப் பிரச்சினைக்கான தீர்வை முன் வைப்பதிலும் முழுமையான கவனத்தை நாம் செலுத்துகின்றோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

**டிப்பர் விற்பனைக்கு**

L,D,XXXX

TATA 3 கியூப்

தொடர்புக்கு: 077 786 0418

(சி-5452)

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்-புத்தூர்

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி - 2019**

காலம்:- 11.02.2019 திங்கட்கிழமை

நேரம்:- பிற்பகல் 01.30 மணி

இடம்:- பாடசாலை மைதானம்

**தலைவர்**

திரு.J.A.தவநாயகம்

(வித்தியாலய முதல்வர்)

**பிரதம விருந்தினர்**

கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)

(கல்வி இராஜாங்க அமைச்சர்)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு.நா.சிவநேசன்

(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)

திரு.இ.குபேசன்

(சிரேஷ்ட உதவி நூலகர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.கா.குகதாஸ்

(கிராம சேவையாளர் J/280,வாதரவத்தை)

திரு.G.அனுதர்சன் (பொதுச் சுகாதார பரிசோதகர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இ)

பாடசாலைச் சமூகம்,
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்,
புத்தூர்.

**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**பிரதான வீதி, மானிப்பாய். பதிவு இலக்கமும் திகதியும்:- J/1605 21.03.1972**

**பதவி வெற்றிடம்**

**பின்வரும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பதவி:- எழுதுனர்
குறியீட்டு இலக்கம் :- 302/14
சம்பள அளவுத்திட்டம் (04/2018 இன்படி) :- 15960 - 18760 / 135X10 - 145X10
வெற்றிட எண்ணிக்கை:- 02
தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் எழுதுனர் பதவியொன்றில் இரு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த.(சாதாரணதரம்) இல் கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம்,தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

♦ கணனி துறையில் MS OFFICE பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன் செய்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவி:- உற்பத்தி தொழிலாளி.
குறியீட்டு இலக்கம்:- 318/17
சம்பள அளவுத்திட்டம் (04/2018 இன்படி):- 14725-17175 / 115X10 - 130X10

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:- 05 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும்
பதவி:-அலுவலக உதவியாளர்
குறியீட்டு இலக்கம்:-317/17
சம்பள அளவுத்திட்டம் (04/2018 இன்படி):- 14725 - 17175 / 115X10 - 130X10
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:- 8ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.
ஏனைய விபரங்கள்:-

1) விண்ணப்பங்கள் சங்க தலைமைக்காரியாலயத்தில் பெற்று "தலைவர், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
2) வயதெல்லை 18-45 வரை (தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது).
3) தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்க வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
4) நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்க பிணையை செலுத்த வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி :- 25.02.2019**

(C-5442)

# ஜனாதிபதியை, சபாநாயகர் விமர்சனம் செய்ய முடியாது



## எதிர்க்கட்சித் தலைவர் எதிர்ப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, சபாநாயகர் கரு ஜெயசூரிய விமர்சனம் செய்ய முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு நாட்டின் ஜனாதிபதியை விமர்சனம் செய்ய கரு ஜெயசூரியவிற்கு உரிமையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கருத்தொன்று தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தவொரு உறுப்பினருக்கும் விமர்சனங்களை வெளியிட அதிகாரம் உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், சபாநாயகர் என்ற பதவியை வகிக்கும் கரு ஜெயசூரிய அவ்வாறு ஜனாதிபதியை விமர்சனம் செய்ய முடியாது என அவர் தெரிவித்தார்.

அரசியல் அமைப்பு பேரவை தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து குறித்து சபாநாயகர் நாடாளுமன்றில் விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் உன்னதமான நாடாளுமன்றின் சபாநாயகர் பதவி மலினப்படுத்தப்பட்டுள்ளதாக மகிந்த தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் ஜனாதிபதி தொடர்பில் முன்வைத்த விமர்சனம் ஹன்சார்ட்டிலிருந்து நீக்கப்படும் என எதிர்பார்ப்பதாக மகிந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7)



# மாகாணத் தேர்தலை முதலில் நடத்துவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்துவதால் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காதென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலே முதலில் நடக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்து தொடர்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேவை என்றால், நாடாளுமன்றத்தில் அதிக அதிகாரத்துடன் பலமிக்க அரசாங்கத்தை அமைக்கமுடியும் .எனவும் அவ்வாறு முடியாவிட்டால் ஜனாதிபதி பத்வியை ஐ.தே.க. பெற்றுக்கொண்டு, நாட்டை ஒரே கொடியின் கீழ் கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். . (இ-7)



யாழ்.வலிதுண்டல் றோ.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா அண்மையில் அதிபர் சி.கணேசராசா தலைமையில் நடைபெற்றது. இதில் வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலிதுண்டல் பங்குத் தந்தை அருட்பணி பி.டினேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-இளவாளை செய்தியாளர்)



நெல்லியடி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச தவிசாளர் தங்கவேலாயுதம் கலந்து சிறப்பித்தார். (படங்கள்:-மகாலிங்கம்)



வேலணை சைவப்பிரகாசா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.





ஈழத்து சீரடி சாய்பாபா ஆலய துவாரகமாயி சாயியின் கும்பாபி ஷேகம் நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# ஜனாதிபதி தேர்தல் மும்முனை போட்டிக் களமாக மாறலாம்

## கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டு

(அநுராதபுரம்)

நிறைவேற்று அதிகாரம் கொண்டஜனாதிபதிமுறையை இரத்து செய்ய நாடாளுமன றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசியல மைப்பு திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது போனால், தமது கட்சியும் கட்டாயம் ஜனாதிபதித் தேர் தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என மக்கள் விடு தலை முன்னணியின் அர சியல்சபை உறுப்பினர் கே.டி லால்காந்த தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தல் மும்முனை ,போட்டியாக இருக்கும். எமது கட்சியின் தலைவர் ஒருவரை வேட் பாளராக நிறுத்தி, அவரு க்கு ஆதரவாக மேலும் பல சக்திகளைத் திரட்டி, அனை த்து வேட்பாளர்களுக்கும் பலத்த சவாலை ஏற்படுத்தப் போவதாகவும் அவர் தெரி வித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே லால்காந்த இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலாவதாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் னர், ஜனாதிபதி முறையை ஒழிக்கும் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறை வேற்றும் வேலைத்திட்ட த்தை நாங்கள் கைவிட வில்லை.

இந்த வேலைத்திட்டம் தோல்வியடைந்தால், கட் டாயம்மும்முனைபோட்டியை ஏற்படுத்தும் தேர்தலாக ஜனா திபதித் தேர்தலை மாற்று வோம்.

எமது கட்சியின் தலை வர் ஒருவரை வேட்பாள ராக நிறுத்துவோம் எனவும் லால்காந்த தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்ன ணியிடம் குறைந்தது 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்கு வங்கி உள்ளது. இந்த வாக்கு வங்கி ஜனா திபதித் தேர்தலில் தீர்மானிக் கும் சக்தியாக இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நல்லிணக்க பயணம் தொடர்கிறது



(அக்கரைப்பற்று)

இன நல்லிணக்கம் மற் றும் மாற்றுத் திறனாளிக ளுக்கான உரிமைகள் என் பனவற்றை வலியுறுத்தி இலங்கையைச் சுற்றி சாத னைப்பயணம்ஒன்றை மாற் றுத்திறனாளி முகம்மத் அலி மேற்கொண்டு வருகின்றார்.

வவுனியாவைச் சேர்ந்த முகம்மத் அலி கடந்த முத லாம் திகதி யாழ்ப்பாணத்தி லிருந்து தனது பயணத்தை வலுவிழந்தோருக்கான சக் கர நாற்காலி மூலம் ஆரம் பித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை அக்கரைப் பற்றைச் சென்றடைந்தார்.

சமூக சேவை திணைக் களத்தின் ஆதரவுடன் இடம் பெற்று வரும் இவரது பயண த்திற்கு சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற் றும் பொது மக்கள் பெரும் ஆதரவையும் உதவிகளை யும் செய்து வருவதாக முகம் மத் அலி தெரிவித்தார்.

இப் பயணத்தை மேற் கொண்டிருக்கும் மாற்றுத் திறனாளி முகம்மத் அலி தன் இடுப்பிற்குக் கீழ் இய ங்காத நிலையிலும் அனை த்து இன மக்களும் நிம்மதி யாகவும் சகோதர வாஞ் சையுடனும் வாழ வேண் டும் என்பதற்காகவும் தன் னைப் போன்ற மாற்றுத் திறனாளிகளுக்குச் சமவு ரிமை வழங்கப்பட வேண்டு மென்பதையும் வலியுறுத்தி இப்பயணத்தை முன்னெ டுத்துள்ளார். (இ-7)

# களனி கங்கையில் நீராடச்சென்ற இளைஞன் பரிதாபமாக மரணம்

கித்துல்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கித்துல்கல களுகொவ்தென்ன பிரதே சத்தில் களனி கங்கையில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணா மல் போயுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற் றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கல்ல பகுதியிலிரு ந்து 18 பேர் கொண்ட தனது நண்பர்களுடன் மற்றும் உறவினர்களுடன் சிவனொ ளிபாதமலை யாத்திரைக்குச் சென்ற போது, வழியில் கித் துல்கல பகுதியில் நீராடிய போது இவர் இந்த அனர்த்தத் திற்கு முகங்கொடுத்துள்ளார்.

நீராடிக் கொண்டிருக் கும் வேளையில் குறித்த இளைஞன் சுழியொன்றில் அகப்பட்டுள்ளார். இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போனவர் சுவாரபுர பிலிய ந்தல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய கவிந்து நிலு புல் குமார எனத் தெரியவந் துள்ளது. காணாமல் போன இளைஞனை கித்துல்கல பொலிஸ் பாதுகாப்பு பிரிவி னரும் கடற்படை மற்றும் பிரதேச வாசிகள் இணை ந்து தேடும் பணியில் ஈடுபட் டனர். இந் நிலையில் நேற் றுக் காலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1640

Search for people, places and things

## இந்துஜா

இதுவரை விளம்பரத்தில் வராத ஒரே தொழில் விவசாயம்தான்... ஏனென்றால் விவசாயம் தொழில் அல்ல எங்கள் உயிர்



## அன்பழகி

ஆசை என்பது சில நாட்களில் மறைந்து போகும் ஆனால்... பாசம் மட்டுமே வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும்



## பார்த்தீபன்

தோல்விகளால் அடிபட்டால் உடனே எழுந்து விடு... இல்லையென்றால் இந்த உலகம் உன்னைப் புதைத்து விடும்...



## கவிப்பிரியா

How are you? என ஆங்கிலத்தில் கேட்பவர்களை விட அழகிய தமிழில் எப்படி இருக்கிறீங்க எனக் கேட்பவர்களே வசீகரிக்கிறார்கள்



## சாவித்திரி

எதையாவது சாதிக்கனும்னு நினைக்கிறப்புதான் பயங்கரமா பசிக்குது, சாப்பிட்டு முடிச்சா தூக்கம் வருது என்ன பண்ணலாம்



## கலையரசி

எதை உன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையோ, அதை மாற்ற முயற்சி செய் எதை மாற்றிக் கொள்ள முடியவில்லையோ அதை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து விடு இதுவே வாழ்க்கையின் ரகசியம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# சிறுவர் அரங்கம்

# புத்தி பலம்



புத்தூர் என்ற ஊரில் இளங்கோ என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் உடல் வலிமையே இல்லாதவன். ஆள் பார்ப்பதற்கு சுமாரான உடல் கட்டு கொண்டவனாக இருந்தாலும், அவனால் கடினமான வேலைகள் எதையும் செய்ய முடியாது. ஆனால், பிறரது பலத்தை தனக்குப் பயன்படுத்தி காரியம் சாதித்துக் கொள்வதில் அவனை மிஞ்ச யாராலும் முடியாது.

இளங்கோவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களும் இளங்கோவை போல் உடல் வலிமையற்றவர்கள் என்று நினைத்து விடக்கூடாது. அவர்கள் மிகவும் பலசாலிகள்.

"தினமும் உடற்பயிற்சி செய்து உடலை பலப்படுத்தி என்ன பிரயோசனம்? மூளையைப் பலப்படுத்துங்கள். அதுதான் வாழ்க்கைக்கு உதவும்!" என்று சொல்லிச் சிரிப்பான்.

அதற்கு அந்த மூவரும், "இளங்கோ! உடலை பலப்படுத்தினால் போதும், மூளை தானே பலப்பட்டு விடும். மூளை வலிமையை விட உடல் வலிமையால் உலகத்தில் நிறைய சாதிக்க முடியும். ஹூம்... நோஞ்சான் பயலான உனக்கு உடலைப் பற்றி என்ன தெரியும்!" என்று சொல்லி சிரிப்பர்.

இப்படியாக அவர்கள் நல்ல நண்பர்களாகவே இருந்து கொண்டிருந்தனர்.

ஒரு நாள் இளங்கோ தனது மளிகைக் கடைக்குத் தேவையான சாமான்களை சந்தைக்குச் சென்று வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அவன் உடலில் பலம் இல்லாததால் அந்த மேட்டின் மேல் சரக்கு வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான். யாராவது ஒருவர் உதவிக்கு வந்தால் வண்டியை எளிதாக மேட்டின் மேல் ஏற்றி விடலாம் என்று நினைத்த அவன், வண்டியை நிறுத்தி விட்டு யாராவது வருகிறார்களா? என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

அப்பொழுது, எதிர்த்திசையில் இருந்து அவனது மூன்று பலசாலி நண்பர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இளங்கோவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

"விடுவிடு"வென்று கீழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடி வந்தான்.

அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்து விட்டனர். உடனே இளங்கோ கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான்.

"எனதருமை நண்பர்களே! உங்களுக்கும் எனக்கும் ஒரு போட்டி!" என்றான் இளங்கோ.

"என்ன போட்டி நோஞ்சான்?" என்று கேட்டனர்.

"உங்களுக்கும், எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்!" என்றான் இளங்கோ.

அதைக் கேட்டு அந்த மூன்று பலசாலி நண்பர்களும் "ஹா... ஹா... ஹா...!" என்று பலமான சிரிப்புச் சிரித்தனர்.

"நோஞ்சான் பயலான உனக்கும், பலசாலிகளான எங்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டியா? வெளியே சொன்னால் எங்களுக்குத் தான் அவமானம். போய் வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்!" என்றனர் அவர்கள்.

"இதோ பாருங்கள். ஆளைப் பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னோடு போட்டியிடுவீர்கள். நீங்களோ போலி. பலசாலிகள் போல வேஷம் போடுகிறீர்கள்!" என்று அவர்களைச் சீண்டிவிட்டான்.

"சுண்டைக்காய் பயலே! எங்கள் பலத்தையா போலி என்றாய். உனக்குப் பாடம் கற்பித்தால்தான் புத்தி வரும். பிடி மறுமுனையை ஒரே ஒரு இழுதான். நீ எங்கோ பறந்து சென்று மண்ணைக் கவ்வப் போகிறாய்!" என்று சொல்லி விட்டு கயிற்றின் ஒரு முனையைப் பிடித்தனர்.

இளங்கோ மேடு ஏறிப் போய் மறுபடியும் இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிறை இறுக்கமாகப் பிடித்தான்.

"ம்! இழுக்கலாம்!" என்று கத்தினான்.

அந்த மூன்று நண்பர்களும் இளங்கோதான் கயிறு இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாய் இழுத்தனர். அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று "இளங்கோவுக்கு பலம் இருக்கிறதோ" என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால், இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது.

மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. ஒரு நோஞ்சான் பயலிடம் தோற்றுப் போனால் அது எத்தனை அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலங்கொண்ட மட்டும் கயிறை இழுத்தனர்.

எதிர்ப்பக்கமிருந்த இளங்கோ, தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக் கொண்டே இருந்தான். வண்டி இப்பொழுது மெல்ல மேட்டில் ஏறத் துவங்கியது.

இளங்கோ தான் மெல்ல பலத்தை இழந்து மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. "இந்த நோஞ்சான் பயலுக்கு ஏது இவ்வளவு பலம்"என்று நினைத்தவாறே மீண்டும் கயிறை வேகமாக இழுத்தனர்.

கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ.

அவர்களுக்கு அப்பொழுதுதான் விடயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று.

மூவர் முகத்திலும் அசடு வழிந்தது. இறக்கத்தில் இறங்கி அவர்களிடம் வந்த இளங்கோ, "மூளை பலம் என்பது இதுதான்" என்று சொல்லி நமுட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, தனது வண்டியை சமதளத்தில் மிகவும் லாவகமாக இழுத்துக் கொண்டு போனான்.

## பொது அறிவு

- உங்கள் நரை முடி குறித்து வெட்கப்படாதீர்கள். அதை ஒரு கொடிபோல பெருமையாக அணியுங்கள். ஏனென்றால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் இந்த நரைமுடியை பார்க்காமலே பலர் புவியில் இறந்துவிட்டார்கள். இதைப் பார்க்கும்வரைஉங்களுக்கு வாழக் கிடைத்தது எத்தனை சிறப்பு என்று எண்ணுங்கள்.
- மூளை நன்கு வளர்ந்து மூளையில் உள்ள வெண்ணிற செல்கள் நரை முடியாக வெளியே வருகின்றன அதுபெருமைக்குரியதே.
- இளமை என்பது வாழ்வின் பாகமல்ல, அது ஒரு மனோநிலை. இளமை என்றால் பயத்தை தைரியம் வெற்றிகொள்ளும் மனோநிலை.
- வலியை கற்றுக்கொள் கணக்கிடாதே..! வேதனையை எதிர்கொள் எதிர்க்காதே.



ஒருவர் : என்னய்யா இது, பனம்பழம் வேணும்னா பனை மரத்துல ஏறிப்பறிக்கணும்.... எதுக்கு பனைமரத்துக்குக் கீழேயே நிற்கறே..?

மற்றவர் : ஏதாவது குருவி உக்கார்ந்து பனம் பழம் விழா தான்னு தான்...

## பொன்மொழிகள்

- வருடங்களை கடப்பதால் ஒருவனுக்கு வயதாவதில்லை. தங்கள் இலட்சியங்களை துறப்பதால்தான் ஒருவனுக்கு வயதாகிறது.
- உங்கள் நம்பிக்கையைப் போலவே இளையவராக இருக்கிறீர்கள், சந்தேகத்தைப் போலவே முதியவராக இருக்கிறீர்கள், தன்னம்பிக்கையைப் போலவே இளைஞராக இருக்கிறீர்கள், பயத்தைப் போலவே முதியவராக இருக்கிறீர்கள், விசுவாசத்தைப் போலவே இளைஞராக இருக்கிறீர்கள்.
- முதுமை என்பது எப்போதுமே உங்களை விட 15 வயது அதிகமாக இருப்பது என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

# அம்பாறையில் பலத்த மழை







(அம்பாறை)

அம்பாறை• மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் இம்மாவட்டத்தின் அம்பாறை நகர்ப் பிரதேசத்தில் 24.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக பொத்துவில் வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஏ.நஹீம் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் 45.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பொத்துவில் பிரதேசத்தில் 16.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் எக்கல் ஓயா பிரதேசத்தில் 14.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக தாழ்நிலப் பிரதேசங்கள், வீதிகள், விவசாயச் செய்கைகள் என்பன நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. தொடர் மழையால் வீதிகள் பலவற்றில் நீர் நிறைந்து காணப்படுவதால் போக்குவரத்துக்கும் பாதிப் பேற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டை, ஆலையடிவேம்பு, சாகாமம், இறக்காமம், அம்பாறை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, மாவடிப்பள்ளி, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பள்ளம், சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, திராய்க்கேணி, ஒலுவில், பாலமுனை ஆகிய பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடற்பரப்பில் பெய்து வரும் அடைமழை காரணமாக மீனவர்களில் பெரும்பாலானோர் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. அத்தோடு அம்பாறை மாவட்டத்தில் நெற் செய்கை அறுவடை இடம்பெற்று வருவதால் விவசாயிகள் தமது அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

அறுவடைக்குத் தயாரக இருந்த விவசாயச் செய்கைகளில் நீர் நிரம்பியுள்ளதால் விவசாயிகள் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (இ-7)

## மகிந்தவுக்கு சந்திரிகா வாழ்த்து



(கொழும்பு)

இந்தியாவின் குடியரசு நாளை முன்னிட்டு கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில், அரசியல் எதிரிகளாக இருக்கும் முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்ஷவும் ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொண்டதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் கலை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் சந்திரிகா குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்தனர்.

அவர்கள் இருவரையும், மங்கள விளக்கேற்றுவதற்கு இந்தியத் தூதுவர் அழைப்பு விடுத்தார்.

நீண்டநாட்களாகப் பேசிக் கொள்ளாத இருவரும், அந்த தருணத்தில் அருகருகே நின்றிருந்தனர். அப்போது, மகிந்த ராஜபக்ஷ மௌனத்தைக் கலைத்து **Madam** எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டார்.

அதற்குத் சந்திரிகா குமாரதுங்க உடனடியாக பதிலளிக்கவில்லை. அவர் வேறொங்கோ கவனம் செலுத்தியிருந்தார். சில நிமிடங்கள் கழித்து வாழ்த்துக்கள் என்று மகிந்த ராஜபக்ஷவிடம் கூறினார்.

பிறகு அவர், "மன்னிக்கவும், இது உங்களுக்கு அல்ல, திருமணம் செய்து கொண்ட உங்களின் மகனுக்குத் தான்" என்று கூறினார். (இ-7)

## அனல் மின் உற்பத்தி தொழிற்சாலையில் இயந்திரத்தினுள் சிக்குண்டு ஊழியர் பலி

(நிந்தவூர)

அம்பாறை, நிந்தவூர் அட்டப்பள்ளம் எனும் இடத்தில் அமைந்துள்ள அனல் மின் உற்பத்தி தொழிற்சாலையில் தொழில் புரிந்து வந்த தொழிலாளி ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை அத்தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த போது இயந்திரத்தினுள் அகப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

உயிரிழந்த தொழிலாளி அட்டாளைச்சேனை தைக்காநகர் 15 ஆம் கிராமத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

இவர் கடந்த 40 நாட்களாகவே இத்தொழிற்சாலையில் தொழில் புரிந்து வந்ததாகவும் அதன் நிமித்தம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை இயந்திரத்தினுள் அகப்பட்டு தூக்கி வீசப்பட்டு அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தொழிற்சாலைப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இவரது தலை மற்றும் உடல் பாகங்களில் பலத்த காயங்கள் காணப்படுவதுடன் இவரது சடலம் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விரிவான விசாரணையை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## வாகனச் சாரதி பாடசாலைகளை கண்காணிக்கும் வேலைத்திட்டம்

(கொழும்பு)

வாகன சாரதி பாடசாலைகளைக் கண்காணிக்கும் வேலைத்திட்டமொன்று மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்தார்.

இதற்காக 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத வாகனச் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளுக்கு எதிராக ஒரே முறையில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. இருப்பினும், பாரிய பிரச்சினை நிலைமை காணப்படுமாயின், சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மணல் அகழ்வு; 17 பேர் கைது

(மஹியங்கனை)

மஹியங்கனை - மாதுறு ஓயாவில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்களைக் கைது செய்துள்ளனர்.

அவர்கள் பயன்படுத்திய 4 ட்ரக் வண்டிகள் மற்றும் 2 லொறிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மஹியங்கனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





யாழ்.அத்தியார் இந்துக்கல்லூரியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ப.சசிக்குமார், யாழ்.கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் பொறுப்பாசிரியர் சி.சிவகாந்தி, வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் இ.செல்வராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.







யாழ். இளவாலை உயரப்புலம் ஸ்ரீ முருகன் முன்பள்ளியில் 2019 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் புளொட் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராகவும் வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருட்களும் முன்பள்ளிப் பொறுப்பாசிரியரிடம் கையளிக்கப்பட்டன.

அறியாமைதான் துயரத்தின் தாய்.

– இங்சர்சால்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்கள் தமிழ் மொழியை நாங்களே ஒதுக்கித் தள்ளினால்...

உலகில் வாழுகின்ற இனங்களில் தன் இனத்தின் பெருமையை அறியாத ஓர் இனம் இருக்குமாக இருந்தால் அது தமிழினமாக மட்டுமே இருக்க முடியும்.

எங்கள் இனத்தின் பெருமையை நாங்கள் உணராதபோது – அதை நினைத்து பெருமையடையாதபோது எம் இனத்தின் பெருமையை மற்றவர்கள் அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

உலகில் உள்ள மொழிகளில் தமிழ் மொழி காலத்தால் முந்தியது. இலக்கியச் செழுமை உடையது. பக்தி மொழி என்று போற்றப்படுவது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, திருக்குறளை உலகுக்கு தந்தது என்ற பெருமைகள் எங்கள் தமிழ் மொழிக்கு உண்டு.

அதனால்தான் தமிழ் மொழியை செம்மொழியாக இந்த உலகம் ஏற்றுக் கொண்டது.

இருந்தும் தமிழ் மொழியைக் கற்பது இயலாமையின் நிலைமை என்று கருதப்படுமளவுக்கு தமிழ் மொழியை நாங்கள் விலக்கி வருகிறோம்.

தவிர, ஆரம்பக் கல்வியைக் கூட ஆங்கிலத்தில் போதித்தால் நல்லது என்று நினைக்கின்ற அளவுக்கு எங்கள் நிலைமை வந்துவிட்டது.

இதன் வெளிப்பாடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் கற்கின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்திருப்பதைக் காண முடியும்.

தமிழ் மொழியும் அதனோடு இணைந்து இந்து நாகரிகம், இந்துசமயம் என்பவற்றைப் பட்டப்படிப்பாக மேற்கொள்வது கௌரவத்துக்குரியதல்ல என்று நினைக்கின்ற அளவில், எங்கள் மொழியை, எங்கள் சமயத்தை நாங்களே ஓரங்கட்டி வருகின்றோம்.

ஆனால் ஏனைய இனம் சார்ந்தவர்களும் மதம் சார்ந்தவர்களும் தங்கள் மொழியை; தங்கள் மதத்தைக் கற்பதைப் பெருமைக்குரிய விடயமாகக் கருதுகின்றனர்.

பௌத்த மதத்தைப் பொறுத்தவரை சிங்கள மாணவர்கள் பௌத்தத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு ஏகப்பட்ட ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதுடன் பௌத்த மதத்துக்கான பிரிவேனாப் பாடசாலைகள் பௌத்தத்தை கல்வியாகப் போதிப்பதில் நிறுவனமயப்பட்டுச் செயலாற்றுகின்றன.

இதுதவிர; இந்தியா, யப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பௌத்தத்தை கற்கவும் ஆய்வு செய்யவுமென கணிசமான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

இதேபோல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய மார்க்கத்தைப் பட்டப்படிப்பாக மேற்கொள்வதில் முஸ்லிம் மாணவர்கள் பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.

தவிர, கிறிஸ்தவ நாகரிகத்தை படிப்பதில் அந்த மதத்தினர் மும்முரமாக இருப்பதும் கண்கூடு.

ஆனால் நாங்கள்தான் தமிழையும் சைவத்தையும் ஓரங்கட்டி எங்களை உயர்த்த நினைக்கின்றோம்.

இந்த இழி நிலை எங்களை விட்டு மாறாத வரை எங்கள் இனத்தின் எதிர்காலம் என்பது இருள் நிறைந்ததாகவே இருக்கும்.

## கணுக்கேணியில் படையினர் நீர் எடுப்பதற்கு எதிர்ப்பு: ஊடகவியலாளர்களுக்கும் எச்சரிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளை கணுக்கேணிப்பகுதியில் பொது குழாய்க்கிணறு ஒன்றில் இருந்து படையினர் தொடர்ச்சியாக நாள்தோறும் இருபதிற்கு மேற்பட்ட தண்ணீர் பௌசர்களில் நீரினை எடுத்துச் செல்வதால் கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த பகுதியில் மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர சென்று படையினரை நீர் எடுக்க வேண்டாம் என்று சொன்னபோது படையினருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் செய்தி சேகரிப்பிற்காகச் சென்ற ஊடகவியலாளர்களை அச்சுறுததும்வகையில்படையினர் ஒளிப்படம் எடுத்துள்ளதுடன் ஊடகவியலாளர் ஒரு வரின் கமராவினை பறிக்க முற்பட்ட சம்பவமும் இடம்பெற்றது.

குறித்த செய்தியை பதிவு செய்துகொண்டிருந்த ஊடகவியலாளர்களை புகைப்படம எடுத்த இராணுவம் மற்றும் இராணுவ அதிகாரிகள் கடுந்தொனியில் எச்சரிக்கை விடுததனர்.

மேலும் சுயாதீன ஊடகவியலாளர் ஒருவரது கமெராவைப் பறிக்க முற்பட்ட படை அதிகாரி ஒருவர் கமெராவில் என்ன உள்ளது கமெராவை காட்டு என கடுந்தொனியில் மிரட்டல் விடுத்தார்.

மக்கள் எமக்கு எதுவும் முறையிடவில்லை. ஊடகவியலாளர்கள் நீங்கள்தான் பிரச்சினையை ஏற்படுத்துகிறீர்கள் என படையினர் ஊடகவியலாளர்களை பார்த்து கடுந்தொனியில் எச்சரித்தனர்.

படையினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஊடகவியலாளர்களால் குறித்த சம்பவம் வெளிக்கொணரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-281)

## மதுபான விற்பனை அனுமதியை இணையத்தளத்தில் பெறலாம்?

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபான விற்பனைக்கான அனுமதியை இணையத்தளத்தினூடாகப் பெறுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஏற்கெனவே வழங்கப்பட்ட அனுமதிகளையும் இணையத்தளத்தினூடாகப் புதுப்பிக்க முடியும் எனவும் மதுவரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் பெண்கள் உட்பட ஐவர் கைது

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட ஒருதொகை வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஐந்து பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஐந்து பேரில் மூன்று ஆண்கள் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் 2 பெண்கள் மீரிகம பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 286 பெட்டிகளில் 57,200 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி சுமார் 31 இலட்சம் ரூபா எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட ஐந்து பேருக்கு சுங்க அதிகாரிகள் ஒன்றரை இலட்சம் ரூபா அபராதம் விதித்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வவுனியா சிறுவனின் மரணம்; மருத்துவ அறிக்கையால் சோகம்

வவுனியா சிதம்பரபுரம் கற்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை அப்பம்மாவுடன் சென்ற சிறுவன் நேற்றுக் காலை கிணற்றி லிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளமை கிராமத்தையே சோகமாக மாற்றியிருந்ததுடன் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் உறவினர்கள் தெரிவித்ததையடுத்து நேற்று மருத்துவ அறிக்கை வெளிவந்ததானது உறவினர்களை மேலும் சோகத்திற்குள்ளாக்கியுள்ளது.

மேலும் இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை சுந்தரபுரத்திலிருந்து சிதம்பரபுரம் கற்குளம்படிவம் 3 பகுதிக்கு தொண்ணூறாம் நாள் நினைவஞ்சலிக்கு முன் ஆயத்த வேலைக்காக சிவானந்தம் தருண் என்ற ஆறு வயது சிறுவன் அப்பம்மாவுடன் சென்றிருந்தார்.

அங்கு ஏனைய சிறுவர்களுடன் விளையாடி கொண்டிருந்ததாகவும் இரவாகியதால் சிறுவனை காணவில்லை என நீண்ட நேரமாகத் தேடியும் எங்குமே கிடைக்கவில்லை. இதனையடுத்து நேற்று முன்தினம் காலை கிணற்றில் இருந்து குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட கிணறானது முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் கிணற்றின் கட்டு 3 அடிக்கு உயர்த்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள கிணறு என்றும் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் உறவினர்கள், அயலவர்கள் தெரிவித்திருந்த நிலையில் நேற்று மருத்துவ பரிசோதனை இடம்பெற்றிருந்தது.

எனினும் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். சட்டவைத்திய அதிகாரி பிரசன்ன அப்புகாமி பிரேத பரிசோதனையின் பின்னர் நீரில் மூழ்கி மூச்சுதிணறியே சிறுவன் உயிரிழந்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடல்ம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை யாழ்.பிரதேசத்தில் திக்கம் சந்தி பிரதேசம், வியாபாரிமூலை, ஸ்ரீலங்கா பாடசாலை, சுப்பரமடம், இன்பருட்டி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஆண்டியபுளியங்குளம், புதுக்குளம், பட்டாணிச்சூர் கிராமம், லக்ஸபானாவீதி, தோணிக்கல்ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம், பெரியகரைசல் பிரதேசம், உமணகிரி, நறுவிலிக் குளம வங்காலை, தோமஸ்புரி, வங்காலை நீர்ப்பாசன சபை, வங்காலை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உடல் இயக்கத்தில் உள்ள நுட்பம்



நமது உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு. இனிமையான உறவு இருக்கும் வரையில் தான் உடல்நலம், மனநலம் பாதுகாக்கப் பெறும். இந்த உறவானது நீடித்திருப்பதற்கு ரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இவை மூன்றும் சரியாக இருந்தால் தான் உயிருக்கும், உடலுக்கும் ஒரு தொடரியக்கம், நட்பு, உறவு சீராக இருக்கும். எந்தக் காரணத்தினாலோ ரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இந்த மூன்றிலே ஒன்று தடுக்கப்பட்டாலும், திசைமாறினாலும், வெளியேறினாலும், அளவிலே குறைந்தாலும், ஓட்டத்திலே குழப்பம் அடைந்தாலும், அந்த ஓட்டத்தில் அணு அடுக்குச் சீர்குலைவு ஏற்படும். அது இரத்த ஓட்டத்திலோ, வெப்ப ஓட்டத்திலோ, காற்று ஓட்டத்திலோ எதனாலே வந்தாலும் சரி, மற்ற இரண்டும் கூட ஓட்டத்திலே தடையாகிவிடும். அந்தக் குழப்பத்தை நீக்குவதற்கு அங்கே இருக்கக் கூடிய மின்சக்தி போதாது. அதனாலே அதிகமான மின்சக்தி அங்கே சேர வேண்டியதாகின்றது.

அவ்வாறு அங்கே சேரும் போது ஏற்கனவே அங்கு தொளை **(Puncture)** ஆகி இருக்கிறது. அளவுக்கு மேலாகக் காந்த சக்தி மின் சக்தியாக மாறும் போது அந்த இடத்தில் நிச்சயமாக மின்குறுக்கு **(short circuit, earthing)** உண்டாகும். அதுதான் வலியாக வரும். இந்த மின் குறுக்கு சிறிது நேரம் இருந்தால் அது வலி என்றும், அது இடத்தாலே விரிந்தும் காலத்தாலே நீடித்தும் இருந்தால் அது நோய் அல்லது வியாதி என்றும் கூறப்படுகிறது. அதற்கும் மேலாக உடலில் உள்ள ஜீவகாந்த சக்தி எல்லாம் அதிகமாகச் செலவாகி, வருவதற்கும் போவதற்கும் மத்தியில் உள்ள இருப்பை ஜீவகாந்தம் வெகுவாகக் குறைக்குமானால் அதனை ஈடு செய்ய முடியாமல் போகும். ஈடு செய்யும் முயற்சியில் உயிராற்றல் தோல்வியடையும். உடலை நிர்வாகம் செய்வதற்குப் போதிய காந்த சக்தி, ஜீவ காந்த சக்தி, உற்பத்தி செய்ய முடியாமல் தோல்வியடையும். அந்தத் தோல்வியிலே தானே குறைவுபட்டு அது தன்னாலே ஏற்படக்கூடிய வெப்பத்தினாலே அதனுடைய மின்கலம் **(battery)** என்று சொல்லக்கூடிய விந்து நாளத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு அதைத் தாங்கி நிற்கக் கூடிய விந்துவையே அல்லது நாளத்தையே உடைத்துக் கொண்டு வெளியேறிய பின்னர் அதைத் தாங்கி நிற்கும் உயிர் உடலில் இருந்து பிரிந்து விடும். இதுவே மரணம். இதுதான் உடலியக்கத்தில் உள்ள ஒரு நுட்பம்.


# இராணுவத்தினரால் மாணவர்களுக்கு கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்







முல்லைத்தீவு மகாவித்தியால மாணவர்களின் இல்ல விளையாட்டுபோட்டி கடந்த 7ஆம் திகதி நடைபெற்றுள்ளது. பாடசாலை முதல்வர் ஜி.ஜெயநேசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் முல்லை.வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் உமாநிதி புவனறாஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க-281)



முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளை தளபதியின் ஆலோசனைக்கு அமைவாக 64 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 8 பாடசாலைகளின் 310 மாணவர்களுக்கான கரப்பந்து பயிற்சிமுகாம் இன்று ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைத்தானத்தில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், விஸ்வமடு மகா வித்தியாலயம், சம்பத்நுவர மகா வித்தியாலயம், வித்தியானந்தா கல்லூரி, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயம், தண்ணீர் ஊற்று முஸ்லிம் மகா வித்தியாலயம், முத்தையன்கட்டு இடதுகரை மகா வித்தியாலயம் உள்ளிட்ட மாவட்டத்தின் 8 பாடசாலைகளின் 310 மாணவர்களுக்கான கரப்பந்து தொடர்பான விதிமுறைகள், நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இலங்கை இராணுவ கரப்பந்து அணியின் பயிற்றுவிப்பாளர்களால் கற்பிக்கப்பட்டன.



நிகழ்வில் முல்லைத்தீவு இராணுவக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு, 64 வது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர, 642 வது படைப்பிரிவின் தளபதி கேணல் ரொகான் பொன்னம்பெரும, முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்திருந்தனர். (க-281)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இறுதியில் சம்பியனாகி அசத்தியது மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம்



உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் கடந்த மாதம் முதல் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வந்தன.

அதன் இறுதிப்போட்டி நிகழ்வுகள் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

30 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பதிவுசெய்யப்பட்ட இந்த தொடரில் தொடர்ச்சியாக இரண்டாவது முறை கிண்ணம்வென்று சாதனை படைத்தது. நடப்பு சம்பியனான மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம். இரண்டாமிடத்தை சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் பெண்கள் பிரிவில் தடகளப் போட்டிகள் - முதலாமிடம், கரப்பந்தாட்டம் - முதலாமிடம், துடுப்பாட்டம் - முதலாமிடம், எல்லே-முதலாமிடம், கால்பந்தாட்டம் - முதலாமிடம், கரம் - முதலாமிடம், மேசைப்பந்தாட்டம் - முதலாமிடம், கூடைப்பந்தாட்டம் - இரண்டாமிடம்.

ஆண்கள் பிரிவில் பூப்பந்தாட்டம் - முதலாமிடம், மேசைப்பந்தாட்டம் - முதலாமிடம், கரம் - முதலாமிடம், கரப்பந்தாட்டம் - இரண்டாமிடம் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. (க)







முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கடந்த 7ஆம் திகதி பாடசாலையின் முதல்வர் க.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரன் கலந்து கொண்டார். (க-281)

## விபத்தில் படுகாய...

யில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான அருட்செல்வம் கீதாமலர் (வயது 43) என்ற குடும்பப் பெண் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (மு-3)

## திருட்டு சந்தேக...

பணத்தை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் 9-ம் திகதி மீசாலை பகுதியிலுள்ள வீடொன்றில் குறித்த நபர் தங்கியிருப்பதாக ஊர் மக்களுக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து குறித்த நபரை பிடித்த பொது மக்கள் நையப்புடைத்ததுடன் இயற்றாலை வரை வீதியில் இழுத்துச் சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொது மக்களின் தாக்குதலுக்குள்ளான குறித்த நபரை பொலிஸார் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதித்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தாக்குதலுக்குள்ளான நபர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னைத் தாக்கியவர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரை சாவகச்சேரி நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்துக்கு கொண்டு சென்ற போது அவரை ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல நீதவான் அனுமதித்து வழக்கினை எதிர்வரும் 15-ம் திகதி வரை ஒத்தி வைத்தார். (மு-10)

## ஐ.நா மனித உரி...

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசெலெட் இந்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இம்மாத பிற்பகுதியில் ஆரம்பமாகும் 40 ஆவது அமர்வில், சபையின் கவனத்தை எடுக்கும் நாடுகள் மத்தியில் இலங்கை இருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் குறித்த பட்டியலில் இலங்கை, நிகரகுவா, வெனிசுலா, குவாட்டமாலா, ஜேமன், சூடான், மியன்மார், தன்சானியா, உகாண்டா மற்றும் புர்கினா பாசோ மற்றும் சிம்பாவ்வே ஆகிய நாடுகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது அமர்வுகளில் கவனம் செலுத்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மார்ச் 22 ஆம் திகதி வரை 40 ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ளது. இருப்பினும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் ஏற்கெனவே மார்ச் மாதம் 20ஆம் திகதி ஜெனிவாவில் இலங்கை பற்றிய அறிக்கையை விவாதிக்க முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மன்னாரில் புதைகுழியொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகள், மனித எச்சங்கள் விவகாரத்தில் ஐ.நா பகுப்பாய்வாளர்கள் அதனை பார்வையிட அனுப்பி வைக்க வேண்டுமென நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

மேலும் இந்தச் சான்றுகளையும் எலும்புக்கூடுகளையும் முந்தைய புதைகுழிகளில் செய்தது போல் அரசாங்கம் சிதைத்தோ அழித்தோ விடுவார்கள் எனவும் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

## ஒருமித்த நாட்டு...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பலபிட்டியவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

புதிய அரசியல் யாப்பிற்கான சட்டமூலம் கூட இதுவரையில் தயாரிக்கப்படவில்லை எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஆனால், புதிய அரசியல் யாப்பினூடாக நாடு பிளவுபட போவதாகவும், பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை இல்லாது போவதாக சிலர் கூறுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்தவர்களே அவ்வாறான போலியான கருத்துகளை கூறி வருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார். பௌத்த மத்திற்கு முன்னுரிமை வழங்குதல், ஒன்றிணைந்து செயற்படுதல், மற்றும் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் ஆகிய விடயங்களில் சகலரும் இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பிலும், தேர்தல் முறைமை சம்பந்தமாகவும் பல கருத்துக்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

எனவே இவை உள்ளிட்டவற்றுக்கு இணக்கபாடு எட்டப்பட்டால், அனைவரது ஒத்துழைப்புடன புதிய அரசியல்யாப்பு தொடர்பான சட்ட மூலத்தை தயாரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய யாப்பில் உள்ள சரத்துக்கு அமைய பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை அவ்வாறே கடைபிடிக்க அனைவரும் இணங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுமார் 70 வருடங்களின் பின்னர் பிரதான தமிழ்க் கட்சி ஒருமித்த நாட்டுக்குள் தீர்வை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அதிகார பகிர்வு அவர்களின் பிரதான கோரிக்கை ஆவதுடன், சில சிறிய சரத்துகளிலும் அவர்கள் திருத்தங்களை கோரியுள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய யாப்பு தொடர்பில் கலந்துரையாட முன்னர், முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் பேசுவது முக்கியம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார். (மு-3)

## வெங்கையா நாயு...

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இந்தியாவின் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவை நேற்றைய தினம் சந்தித்துள்ளார்.

பெங்களூரு நகரில் த ஹிந்து பத்திரிகையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்ட போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த மாநாட்டின் இரண்டாவது நாள் நேற்று என்பதுடன் துணை ஜனாதிபதி இதன்போது முக்கிய உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

## தமிழ்த் தேசியக்...

இந்த திட்டத்தை பரிந்துரைத்தார்.

ஐ.நா விவகாரம், அரசியலமைப்பு மற்றும் கூட்டமைப்பின் முக்கிய கொள்கை முடிவுகளை இதுவரை இரா.சம்பந்தன், தனக்கு நெருக்கமான ஓரிருவருடன் மட்டுமே பேசி எடுத்து வந்தார்.

இந்த நிலையில், இம்முறை கூட்டமைப்பு எம்.பிகள் கூட்டாக வெளிநாட்டு தூதர்களை சந்திக்கும் திட்டத்தை அவர் விரும்பவில்லை என்றும் இந்த விவகாரம் பேசப்பட்டபோதே, அது தேவையற்றது என்ற சாரப்பட அவர் பேசினார் என்றும் அறிய வருகிறது. இந்நிலையில் 18ம் திகதி சந்திப்பு இடம்பெறுமா என்பதில் குழப்பம் உள்ளது.

அதேவேளை, 18ம் திகதி சந்திப்பிற்கு தூதர்கள் தரப்பிலிருந்தும் சம்மதம் தெரிவிக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (மு-3)

# துபாய் சட்டத்தில் மாகந்துர மதுஷ் தண்டிக்கப்பட வேண்டும்!

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் துபாயில் கைதுசெய்யப்பட்டுள்ள மாகந்துர மதுஷ், துபாய் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவது அவசியமென சட்டமா அதிபர் திணைக்களத்தின் முக்கிய அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ள ஆங்கில நாளிதழ் ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்துள்ள குறித்த பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மதுஷ் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டால், அவருக்கு உரிய தண்டனை வழங்கப்படுமா என்பது சந்தேகமென குறிப்பிட்டுள்ள அந்த அதிகாரி, விசாரணை பொறிமுறைகளில் காணப்படும் தாமதம் போன்ற காரணிகளினால் மதுஷ் பிணையில் விடுவிக்கப்படவும் வாய்ப்புண்டு என சுட்டிக்காட்டியுள்ளார். (மு-3)

# நாவற்குழி பகுதியில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி பகுதியில் கஞ்சா செடி வளர்த்து வந்த ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முற்பகல் 11 மணியளவில் கைது செய்துள்ளனர்.

நாவற்குழியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் கஞ்சா செடி வளர்க்கப்படுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே கஞ்சா செடி வளர்ப்பில் ஈடுபட்ட சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதோடு வளர்க்கப்பட்ட கஞ்சா செடியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த கைதினைத் தொடர்ந்து நாவற்குழிப் பகுதியில் மேலும் சில இடங்களில் கஞ்சா செடி வளர்க்கப்படுகின்றதா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (மு-89)

# வவுனியா வீதி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து யாழ்நோக்கி சென்ற வான் ஒன்று புளியங்குளம் முத்துமாரி நகருக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போது வீதியில் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்திருந்த நிலையில் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபட்ட போதிலும் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் புளியங்குளம் முத்துமாரி நகரை சேர்ந்த கந்தசாமி சத்தியநாதன் (வயது48) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-3)

# சாதாரண பெரும்பான்மை கூட பாராளுமன்றில் அரசுக்கில்லை

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் அரசாங்கத்திடம் இருந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் இல்லாமலாகி, சாதாரண பெரும்பான்மையும் இல்லாமலாகியுள்ளது. அதனால் அடுத்த வரவு, செலவு திட்டத்தை அங்கீகரித்துக்கொள்வது அரசாங்கத்துக்கு பெரும் சவாலாக மாறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. 113 உறுப்பினர்கள் இருப்பதாக தெரிவிக்கின்றபோதும் 103 பேரே இருக்கின்றனர். தேசிய அரசாங்கம் அமைக்கும் பிரேரணையை கொண்டுவந்த போது கட்சி தலைவர் கூட்டத்தில் அதற்கு நாங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தோம்.

என்றாலும் அதனை எப்படியாவது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அங்கிகரித்துக் கொள்வோம் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

என்றாலும் இறுதி நேரத்தில் இவர்கள் நம்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க மறுத்ததால் அரசாங்கம் அந்த பிரேரணையை கொண்டுவரவில்லை எனவும் குறிப்பிட்டார். (மு-3)

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 2019/02/10 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3852 |

ஆங்கில எழுத்து: V — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 3 6 7 9 0

தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 2019.02.10 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2031 |

ஆங்கில எழுத்து: I — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 16 32 59 72

தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 2019-02-10 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 113 |

ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 07 28 38 57

தேசிய லொத்தர் சபை

**நீரோகா**

| | |
|---|---|
| திகதி | 2019/02/10 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 510 |

லக்கினம்: மேஷம் — வெற்றி இலக்கங்கள்: 09 52 53 69 — 13

தேசிய லொத்தர் சபை

## அமெரிக்கா...

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமையைத் துறக்கும் முயற்சி வெற்றியளிக்காது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட சிலர் நம்புகின்றனர்.

இது ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் சிறிசேன போட்டியிடுவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்றும் அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் காதுகளுக்கு எட்டிய வதந்திகளின் அடிப்படையிலேயே அவர்கள் இத்தகைய நம்பிக்கையை கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

எனினும், கோத்தபாய ராஜபக்சவே இன்னமும், வேட்பாளர் பட்டியலில் முன்னணியில் இருக்கிறார் என்றும், அமெரிக்க குடியுரிமையை துறப்பது ஒரு பெரிய பிரச்சினையே இல்லை என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியுள்ளன.

குடியுரிமையைத் துறப்பதற்கு முன்னதாக, ஜனாதிபதி வேட்பாளராக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதை அவர் விரும்புகிறார் என்றும் கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன என்று கூறப்படுகிறது. (மு-3)

## தாய்ப்பால்...

சாம்பல் தோட்டம் பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பம் ஒன்றின் ஒரு மாதக் குழந்தை பாலுக்கு அழுத நிலையில் தாய் பாலினை ஊட்டியுள்ளார்.

இதன்போது தாய்ப்பால் புரைக்கேறியுள்ளது. உடனடியாக குழந்தையை வவுனியா வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போதும் முயற்சி பலனின்றி குழந்தை மரணமடைந்துள்ளது.

ராங்கநாதன் ரவீன் என்கின்ற ஒரு மாத ஆண்குழந்தையே இவ்வாறு மரண மடைந்தது. (மு-250)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7421)

**பயிற்சி நெறியுடன் கூடிய வேலைவாய்ப்பு**

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் எமது E.P.T நிறுவனம் ஆனது 3 மாத கால பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பினை வழங்க இருப்பதால் அதற்காக O/L, A/L படித்த அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சியின் போது
1ம் மாதம்- 15000
2ம் மாதம்- 25000
3ம் மாதம்- 35000

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உங்கள் முழுப்பெயர், தே.அ.அ. இலக்கத்தினை இவ் 0775075589 இலக்கத்திற்கு SMS செய்யவும். (7475)

மேலதிக விபரத்திற்கு - 076 885 3201, 021 314 2828

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
வடமாகாண ICT ஆசிரியர் தெரிவு
பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் மாலை நேரம் நடைபெறுகின்றன
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
[யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்] (C-5456)

**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**
- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட - குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413 (C-5440)

**தவறிவிட்டது**

நடராசா சிவசுப்பிரமணியம் ஆகிய எனது கறுப்பு நிற கைப்பை மிக முக்கியமான இரு திறப்பு கோர்வையுடன் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் உள்ள தேநீர் கடையடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நீர்வேலி திருமுருகன் மண்டபத்தில் அல்லது 077 666 0211 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல் :- ந.சிவசுப்பிரமணியம் (செட்டியார்) (C-5451)

**கோலாகல திறப்புவிழா**

இன்று (11.2.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.30 முதல் பிற்பகல்12.15 வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்
இல.2, காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம்
(இராமநாதன் மகளிர் கல்லூரி முன்னால்)
**சாயி லங்கா புத்தகசாலை**
எனும் வியாபார ஸ்தாபனத்தை வைபவ ரீதியாக வட மாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.S.A.சற்குணராஜா அவர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (C-5443)

திறப்பு விழாவினை முன்னிட்டு சில தினங்களுக்கு 10% முதல் 70% வரையான கழிவுகள் வழங்கப்படும்.

பாலர் முதல் பல்கலைக்கழகம் வரையான புத்தகங்கள், இலங்கை, இந்திய வெளியீடுகள், மருத்துவ நூல்கள், அகராதிகள் மேலும் பல வகையான நூல்கள், காகிதாதிகள், எழுது பொருட்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தக வெளியீட்டாளர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆதரவைத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாயி லங்கா புத்தகசாலை
இல.2, காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம்.
தொ.பே: 0212224858, 0771856010 வைபர்: 0775027767

**கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு**
Pilot Program - சிக்கனமான, குறுகிய காலத்தில் கனடாவிற்கான தயார்ப்படுத்தல்
2018 ல் A/L சித்திபெற்றவர்களா? 3 தொடக்கம் 5 வருடங்களில் சரியான தயார்படுத்தல்களின் மூலம் கனடாவில் நிரந்தர பிரஜை ஆகலாம். கனடாவில் எந்தெந்த துறைகளில் வேலை வாய்ப்புக்கள் அதிகமுள்ளன அந்த இடங்களை அடைவதற்கு நீங்கள் என்ன படிக்க வேண்டும், எந்தமாதிரியான வேலை அனுபவங்களை பெறவேண்டும் என்பதனை இப்போதே சரியான வழிகாட்டலைப் பெறுவதன் மூலம் நேர விரயம், பண விரயம் போன்றவற்றைத் தவிர்த்து கனடிய வேலை வாய்ப்பு, நிரந்தர வதிவிட உரிமையை பெறலாம். (C-5458)
Canada
பெற்றோர்களின் வருகை வரவேற்கத்தக்கது.
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் கனடிய குடிவரவுத்துறையில் நிபுணத்துவமும் அங்கீகாரமும் பெற்ற Regulated Canadian Immigration Consultant இனால் உங்களுக்கு போதிய வழிகாட்டல்கள் வழங்கப்படும்.
Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants
80 NASHDENE RD, E BLOCK SUITE 110 TORONTO ON, M1V 5E4, CANADA
கருத்தரங்கு நாள் 17-02-2019 ஞாயிற்றுக்கிழமை
V2 Travels
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
முற்பதிவு அவசியம்
0768226243

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-5439)

**நியூசிலாந்து வேலைவாய்ப்பு**
றெக்னீஷியன்
Nissan Master NZ$ 26.50 per hr
Diesel NZ$ 25 per hr
Truck(Volvo) NZ$ 25 per hr
ஆங்கில தொடர்பாடல் திறன் அவசியமானது
2 வருட பணி ஒப்பந்தம்(மீள்புதுப்பிக்கத்தக்கது), தினமும் 8 மணி + OT, வாரத்தில் 5 நாள் வேலை.
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
021 221 9 221
221-1/1 மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk (C-5457)

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மிக்கல் பிரான்ஸிஸ் (அழகு)
11.02.2019



மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்



அருள்தாஸ் குடும்பம்
நிமால் குடும்பம்
ரஞ்சித் குடும்பம்
அச்சுவேலி, பத்தமேனி. (7440)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536 (C-5438)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.